முருகன் துணை

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்துவரும்

# பட்டினத்தார்

சென்னை: ஸ்ரீ பால விநோத நாடக சபாவின் உபாத்தியாயர்



நாடகாசிரியர்: ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள் இயற்றியது.

OFFICE OF THE ... 20 NOV 1934

சென்னை:

... நாயகர் ஸன்ஸ் பதிப்பு.

O-,892MSL7,D
N34
78505

Copy...

1934.

[விலை 0-6-0.

ஸ்ரீ ஷண்மு ... ார்க்க சபா,

மதுரை ஸ்ரீ ஞ ... கான சபா,

ஸ்ரீ மீனுட்சி ... ுண லீல சபா,

சென்னை: ஸ்ரீ பால விநோத நாடக சபையார் முதல்

சகல நடிகரும் பாடி நடித்துவரும்

## "திருவெண்காடர்"

என்னும்

# பட்டினத்தார்

உடுமலை: ஸ்ரீமான் சரபகவி மாணவரும்

சென்னை ஸ்ரீ பால விநோத நாடக சபாவின் ஆசிரியருமான

சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம்

நாடகாசிரியர்:

**ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்**

எழுதியது.


பிரசுரித்தவர்கள்:

**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

காபிரைட்] 1934 [விலை அணா 6.

78505
2713
894·8112
0-,892 MSL7,P
N34

உ

முருகன் துணை

# முகப்பொருள்

## வெண்பா

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

என்பது உலகானுபவம். நன்மைமிக்கப் பெரியோரைப் பூசிப்பதும் போற்றுவதும் அவர் தம் புகழைப்பாடுவதும் நமது இந்திய மக்களது இயற்கைக் குணமென்ப துண்மை. எனவே நமது புராதன புண்ணியப் புராணமாகிய பட்டினத்தாரின் கதையை நாடகரூபமாகப் பாடயானு முன் வந்தேன்.

1914-ல் சென்னை புரசைவாக்கம் சுண்ணும்புகாரத் தெருவில் வசித்துவந்த கிள்டர் (லால்குடி) அப்பாசாமிப்பிள்ளை என்பவருக்குப் (பட்டினத்தார் திருப்பாடற்றிட்டும், ஞானப்ரகாச உரையும்) என்ற புத்தகம் எழுதிக்கொடுத்தவனும் நானே. காலவேற்றுமையால் அவர் அப்புத்தகத் தலைப்பில் என்பெயரைக் காட்டாது. மற்றொருவர் பெயரை மகுடமாக்கி அச்சிட்டு விட்டனர்.

நிகழும் 1934-ல் மேற் சொன்ன பட்டினத்தார் கதையை நாடகரூபமாக நானெழுதி அச்சிடும் சகாயம்புரிந்த குருவாசீர்வாதப் பெருமையை என்னென்று புகழ்வது கவியரசர் பெருமான் உடுமலை முத்துசாமியவர்கள் கருணையால் நாடகாசிரியன் பட்டம்பெற்ற என்னால் நடத்திய ஸ்ரீ பாலவிநோத நாடக சபாவில் இந் நாடகத்தை நடத்த முயற்சித்தும் பலித மாகுமுன் பல காரணம் நாடகம் நடத்தத் தடையானது.

ஷை சபாவைப் பிரிந்து வீட்டில் வேலையின்றி வீற்றிருக்குந் தருணம் நமதாப்த நண்பர் தேவாரம் (பிரம்பை) அப்பாதுரைப் பிள்ளையவர்கள் மழையில் நனைந்துகொண்டு ஓர்நாள் என்னைச் சந்தித்துப் பட்டினத்தார் கதையை நாடகமாக எழுதித் தரவேண்டுமென்று வற்புறுத்தியது நிமித்தம் அவரது சகாயத்தைக்கொண்டு கதை வரலாறு தெரிந்து நாடகரூபமாக எழுதி முடித்தேன்.

அது சமயம் ஷை பிள்ளையவர்களே இக் கதாநாயகனாக வேடம் புனைந்து ஸ்ரீ ஷண்முகானந்த பக்திமார்க்க சபாவில் பொம்பூர் பாலெஸ் தியேட்டரில் இந் நாடகத்தை நடத்தி நற்பேறு பெற்றனர். என்பதை பிரசித்தமாகத் தெரிவிப்பதே எனதுரிமை.

நிற்க, இந் நாடகத்தை சில சபாளரும், சில பாலியர் நாடகக் கம்பெனியாரும் வெகு விமரிசையாக நடத்துகின்றனர். பார்க்காம்மிய மாகத் தோற்று மிக் கதையை நான் என் புத்திக்கேற்றபடியும் நாடக நடிகர் அனுபவத்திற்குகந்தபடியும் சீன் வகுத்து எழுதி முடித்திருக்கிறேன்.

முக்கியமாக இக் கதானுசாரங் கெடாமல் எழுதவேண்டு மாகில் இரண்டு பாகமாக எழுதலாம் நாடக உலகிற்கது பொருந்தாதென் றெண்ணி ஒரு பாகமாகவே எழுதியிருக்கிறேன். வெகுவாக கதாநாயகர் யாத்திரை செய்துவரும் க்ஷேத்திரங்களையும் இன்னும் இடையில் அவரால் நடந்தேறிய சில விசேடங்களையும் விரித்தெழுதாது சுருக்கமாக நாடகரசிகத்துக் கேற்றபடி எழுதி யிருக்கிறேன்.

தவிற, மருதவாணாது சில முக்கியத் திருவிளையாடல்களை நடப்பதைப்போற் காட்டாது நடந்தேறிய பாவனையாக எழுதி முடிக்க நேர்ந்தது. ஆகவே நமது பட்டினத்தாரின் உண்மைச் சரிதமறிந்த சகலரும் இந் நாடகத்தைப்பார்த்து கதை விட்டு விலகி யிருக்குங் காரணத்தைத் தெரிந்துகொள்ளவே இங்கிவ் வரலாற்றை விவரித்தெழுத நேர்ந்தது.

சில சீன்களில் ஆக்டர்கள் மனோதர்மமாகப் பேசிக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களிருப்பதால் அதைப் பெருக்கி எழுதாது விடுத்தனன். அவ்வவ்விடங்களில் நடிகர்கள் தத்தம் மனோபாவப் படிப் பேசிப் பாடி நடிக்கலாம்.

சுவேதாரண்யர், திருவெண்காடர், பட்டினத்தார் என்னு மூன்று விதப் பெயர்கொண்ட நமது கதாநாயகருக்குக் கடைசிவரை திருவெண்காட ரென்னும் மகுடத்தை வைத்தே எழுதியிருக்கிறேன். இதையும்வாசகர்கள் நடிகர்கள் முக்கியமாக கவனிக்கக்கோருகிறேன்.

இந்நாடகத்தில் சந்தர்ப்பத்துக் கேற்றபடியும் கற்பனாலங்கிர்த மாகவும் காட்டவேண்டிய சீன் வகைகள் அனேகமுண்டு. சீன்கள் வகையில் நாடிக நடிகர் குறைவின்றி நடத்தும் பட்சத்தில் இந்நாடகம் பெரிதும் பரிமளித்து விளங்கும். மேல் நான் எழுதவேண்டிய

தோன்றுமில்லை. பொதுவாக இந்நூல் நமது தமிழ் நாடக நடிகர் ஏனைய சகோதர சகோதரிகளுக்கும் பெரிதும் பயன்படுமாதலின் சகலரும் இதனை அங்கீகரித்து என்னையும் அபிமானித் தாதரிக்க வேண்டுகிறேன்.

இந்நூலில் திருவெண்காடரென்னும் பட்டினத்தார் துறவு பூண்டதிலிருந்து, அவரால் பாடப்பெற்ற பாடல்களை கதானுசாரப் பொருத்தமாகத் துலங்குவதால் சமயத்துக்கேற்றபடி அப்பாடல்களையே சந்தர்ப்பானு சாரமாக எழுதியிருக்கிறேன். நடிகர்கள் அது விஷயத்தையும் ஆலோசித்துணர்ந்து அப்பாடல்களைத் தள்ளி விடாது பாடிக்கொள்ள வேண்டுகிறேன்.

அன்றியும், இந்நூலின் சகல வுரிமைகளும், சென்னை: மெஸர்ஸ் B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ் அவர்களுக்கே வுரியதாதலின், மற்றவர்கள் இப்புத்தகத்தையேனும், இதிலுள்ள பாடல்களையேனும் அச்சிட்டு வெளியிடில் புத்தக ரிஜிஸ்டர் சட்டப்படி சகல நஷ்டத்திற் காளாவார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

10-5-34
சென்னை.

அன்பன்:
கவிராஜ் ச. சு. சங்கரலிங்கன்
நாடகாசிரியன்.

Copy Right and Rights of Translation in any other Languages, strictly reserved by the Publishers.

## நாடக நடிகர்கள் :

| | |
|---|---|
| சிவநேசர் | (பட்டினத்தாரின்) தகப்பனார் |
| ஞானகலாம்பிகை | ஷை தாயார் |
| குபேரன் | மருதவாணர் (அவதார புருஷன்) |
| திருவெண்காடர் | (பட்டினத்தார்) கதாநாயகர் |
| சிவகலை | ஷை மனைவி |
| மீனாக்ஷி | ஷை தமக்கை |
| சிவசருமர் | ஓர் பிராமணர் |
| சுசீலை | ஷை மனைவி |
| சேந்தனார் | பட்டினத்தாரின் (கஜானாதிகாரி) |
| உபாத்தியாயர் | பள்ளிக்கூடத்தலைவர் |
| அருணகிரி<br>அருணாசலம்<br>அண்ணாமலை<br>அம்பலத்தாடி | பள்ளிப்பிள்ளைகள் |
| மருதவாணர் | (குபேரனது அவதாரம்) பட்டினத்தார் மகன் |
| பழநியப்பன்<br>பரசுராமன்<br>பரமேஸ்வரன் | முத்து வியாபாரிகள் |
| விஸ்வலிங்கம்<br>ஏகாம்பரம்<br>கபாலீஸ்வரன் | கப்பல் வியாபாரிகள் |
| தியாகராயன் | பட்டினத்தாரின் தொண்டன் |
| சிவஞானம்பிள்ளை | ஷையான் தந்தை |
| தேவாம்பிகை | ஷையான் தாயார் |
| பார்வதியம்மன் | உலக ரட்சகி |
| குட்டிஜிட்டி<br>எட்டிபட்டி | கள்வர்கள் |
| பத்திரகிரியார் | உஞ்சேனைமாகாள அரசன் |

அடியார்கள், பந்துஜனங்கள், அந்நிய ஸ்திரீகள், குடிஜனங்கள், சேவகர், மந்திரிகள், செட்டிப்பிள்ளைகள், செட்டிப்பெண்கள், காவலன், பிச்சைக்காரன், விளையாட்டுப் பிள்ளைகள் முதலியோர்.

### நாடகம் நிகழிடம் :

காவிரிப்பூம்பட்டினம், திருவிடைமருதூர், கொங்குநாடு, உஞ்சேனைமாகாளம், திருவொற்றியூர் முதலியனவாம்.

உ

முருகன் துணை

# "திருவெண்காடர்"

என்னும்

# பட்டினத்தார்

## காப்பு வெண்பா

வாக்குதவு நீடுநிதி வந்துதரும் வெந்துயரம்
போக்குமனு ஷார்த்தமிகப் போதிக்குன்—டாக்குமின்பம்
ஆதித் தனியானை யானனவி நாயகன்றன்
சோதித்தண் சேவடிப்பூந் தாள்.

## இதுவுமது—விருத்தம்

செட்டினச் சேர்மையாளர் திருவெண்காட் டோரென்னும்
பட்டினத் தாரின்காதை பகருதற் குகந்துகாக்கும்
தட்டினத் தமருஞ்சுண்டல் தனிமலைப்பழந் தேன்வர்க்கம்
கட்டினக் கண்டுக்கேற்ற கரிமுகன் கமலக் காலை.

சீன்—1. இடம்—பூசாக்ருகம்.

நடிகர்:—சிவநேசன்செட்டி, ஞானகலாம்பிகை.

[நடிகரிருவரும் பரமேசனைப் பணிந்து பாடுதல்]

## பாட்டு

(கோண்டாடும்பண்டாரவேலா என்ற மெட்டு)

கண்ணிகள்

ஈசா ப்ரகாசா விலாசா—அருள்பர
மேசா விஸ்வாசா க்ருபேசா—அடியவர்
நேசா சுகேசா மலைவாசா—திருநட
ராஜா மகேசா சபேசா (ஈ)

அத்தா ப்ரசித்தா விசாலா—மறைதுதி
முத்தா பரிசுத்தா சுசீலா—அருள்புரி
கர்த்தா மாசற்றூர் மணாளா—உமையவள்
பர்த்தா ஞானத்தார் குணாளா (ஈ)

[இருவரும் ஆசனத்தமர்ந்து]

சிவநேசர். வ-ம்:—பெண்ணே! பூர்வ புண்ணிய விசேஷத்தால் எண்ணிறந்த திரவியங்கள், ஏனைய பந்துஜனதிக்கங்கள் முதலிய சீரும் சிறப்பும் பொருந்தியிருந்தும் பரமேஸ்வரனுடைய கிருபையினால் புத்திரபாக்கியம் இல்லாதிருப்பதுபற்றி என் மனம் நாளுக்கு நாள் நலிந்து வாடுகிறது. தவிரவும்,

## வெண்பா

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் வுடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கை பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

என்பதுபோல் புத்திரனில்லாதவர்கள் (புத்) என்னும் நரகில் வீழ்வார்கள் என்பதும் ஆன்றோர்மொழி யல்லவா? ஆகவே,

## பாட்டு

(வைகுந்தவாசா என்ற மெட்டு)

### பல்லவி

ஏதுசெய்வேன்நானே புத்திரபாக்கியம்
இல்லாதபாவியாகி ஏங்கிவருந்தலானேன் (ஏது)

### அநுபல்லவி

பூதலமெங்கும்புகழ் பொன்பொருள்பலன்மீது
பாதகமேதவிர்க்கும் பாலனருளில்லாது (ஏது)

### சரணம்

பிள்ளையில்லாதவாழ்வு பேருலகினில்தாழ்வு
பேசுமதுவேசிலாக்யம் பெற்றோர்தமக்காரோக்யம்
இல்லைமுன்ஜென்மத்தில் எவரிட்டசாபமோ
ஈசனருளிதுவோ ஏதுவோ தெரிகிலேனே (ஏது)

வ-ம்:—பெருமகவில்லா வாழ்வு தாழ்வேயன்றி பெருமையுண்டா? எவரிட்ட சாபமோ யார்செய்த வினையோ நம்மை இக்கெதிக்குள்ளாக்கியது.

ஞான. வ-ம்:—நாதா! இது விஷயத்தில் எனக்கும் மனக்கவலைதான் என்போன்ற மாதர்கள் பலரும் ஆண்மகவற்றவள் என்றென்னைப் பரிகசிக்கநேர்ந்ததுங் கடவுள் கிருபைதான். தாங்கள் தெரிவித்ததுபோல் இக்காவிரிப்பூம்பட்டினத்து வைசியர்குல மக்களில் நாம் செல்வக்குபேரராயிருந்தும்,

பா டு
ம
(ராமபஜனகோதி எனற மெட்டு)

பல்லவி

பிள்ளையில்லாத பாக்கியம்
பெற்றேனென்னசி லாக்கியம் (பிள்)

அநுபல்லவி

செல்வமிருந்து மென்ன
தேசம் புகழ்ந்து மென்ன
சொல்லும் புத் திரசந்தானம்
சுகிர்தமெஞ் ஞானம் (பிள்)

புத்திர னற்ற வர்க்குப்
புத்தென்னும் நரகம் வாய்க்கும்
உற்ற பெரியோர் வாக்கியம்
உலகா ரோக்யம் (பிள்)

வ-ம்:—எவ்விதத்தில் நமக்கு இக்குறை நீங்குவது. எல்லாம்வல்ல ஈசனுக்கு நாம் செய்தகுற்றம் யாதோ. அன்றி முன்ஜென்மத்தில் எந்த பிள்ளைக்குந் தாய்க்கும் பெருந்தீங்கு புரிந்தோமோ; இப்பிறப்பில் இத்துன்பத்தில் ஆழ்த்திவைத்திருக்கிறது. இதற்கென்செய்வது.

[இருவரும் ஈஸ்வரத் தியானத்துடன் நிற்கின்றனர். உள்ளிருந்து அசரீரி பேசுதல்.]

அசரீரி. வ-ம்:—ஏ! சிவநேச ஞானகலாம்பிகா.

சிவ. வ-ம்:—யாரது.

அச. வ-ம்:—நான்தான் குபேரனுகிய அசரீரி.

சிவ. வ-ம்:—நமஸ்காரம். இதுசமயம் தாங்கள் அழைத்த காரணம் யாது?

அச. வ-ம்:—தற்சமயம் நீங்களிருவரும் புத்திரசோகத்தால் மனம் வருந்தி நிற்கவேண்டாம். பரமேஸ்வரன் கட்டளைப்படி நானே உங்களுக்கு ஆண்மகவாகப் பிறந்து உங்கள் மனக்குறையை மாற்றி வைக்கிறேன். விசனம் விடுங்கள்.

சிவ. வ-ம்:—சுவாமி நமஸ்காரம்; வேண்டுந் தங்களுடைய கிருபை.

அச. வ-ம்:—நல்லது; நான் சென்றுவருகிறேன்.

[அசரீரி மறைதல்.]

ஞான. வ-ம்:—நா...தா! இதுவு... ம்மையாளும் அம்மையப்பனுடைய அருளன்றி வேறன்று. ...க்கினி கிலேசம் வேண்டாம். வாருங்கள் வளவிற்கேகுவோம்.

## இருவரும் பாடுதல்

(அரிஹரிகேசவகருணை என்ற மெட்டு)

பல்லவி

அரஹரசிவசிவ அம்பலவாணை
அரவாபரணை அகிலாதரணை (அ)

அநுபல்லவி

சுரர்க்கனுகூலா சுந்தரிலோலா
தோத்திரமாதவர் பாத்திரமூலா
தூபதீப மேலா (அ)

சரணம்

சந்த்ரஜடாதர மந்த்ரசிங்காரா
சங்கரலிங்கந் தமிழுக்காதாரா
சகலபுவன அதிகாரா (அர)

மான்மழுப்படையாய் மாசிலாவிடையாய்
மாமறைக்குடையாய் மலர்க்கொன்றைத்தொடையாய்
மாபுலித்தோ லுடையாய் (அர)

[போகின்றனர்.]

(சீன் முடிவு.)

---

**சீன்—2.** **இடம்—ராஜவீதி.**

நடிகர்:—குபேரன்.

[திரைமேலேற குபேரன் வெளிவந்து.]

வ-ம்:—இமாலயத்தில் உமாபதியின் தர்பாரில் தேவர்களுக்குள் நடந்த வாக்குவாதத்தை முன்னிட்டு பகவான் வீசியெறிந்த யோகதண்டத்தை எடுக்கும் பலமில்லாது மனம் பகைத்து அவமானமடைந்த தேவர்களின் மனோகர்வமடங்க மார்க்கண்டேய மகரிஷியானவர் யோகதண்டத்தை எடுத்து ஈஸ்வரனிடம் கொடுத்துப் பக்தியே உலகிற் பெரியது. பரமேஸ்வரன் பக்தர்க்கடக்கம் என்பதைத் தெளிவறக் காட்டினார்.

அது தெரிந்து குபேரனாகிய யான் பகவானைப்பணிந்து, பூலோகத்திற் பிறந்து பக்திப்பெயர் புனைந்து முத்தியடைய வரந்தரக்

கோரினேன். கயிலாசலரும் என் கருத்துணர்ந்து, காவிரிப் பூம்பட்டினம் சிவநேசஞ் செட்டியாரின் புத்திரன் கலி நீங்க மானிடாவதார மெடுத்து, இல்லாசகத்தி வீடுபட்டுப் பின் துற வறப் பேரடைந்து எதாஸ்தான மனுருவா என்ருக்யாபித்த வண்ணம் இங்கு பிராப்தமானேன். (யோசித்து)

ஆம்; வளமிருந்த ஜலப்பெருக்குடைய காவிரிமா நதி சங்கமமாகும் இக்காவிரிப்பூம்பட்டினத்தின் விசாலமான விநோதலங்காரத்தை விவரிக்க என்னொருவனுலாகாது.

அதோ; வாய்க்கால்களின் ஜலப்ரவாகத்திற்செல்லும்வாளை, சேற் கெண்டை என்னும் பலவித நாமம்புனைந்த மச்சங்களானது, ஒன்றுடன் ஒன்றெதிர்த்து குதித்து மேலெழுந்து, இருபுறமும் நிற்கும் கமுகுமரக்குலைகளில் மோதியதால் அக்குலைகளின் காய்கள் ஜலத்தில் விழுந்தோடி நெல்வயலெங்கும் தங்கிவயல்களின் வனப்பை அதிகரிக்கச்செய்யும் நேர்த்தியும், நறுமணமிகுந்த மருமலர்சூழ்ந்த நந்தவனங்கள் அமைப்பும், எண்ணுதற் கியலாத தேவாலயங்களும், வேதகோஷ்டங்களும், அதிதி பாதேசிகளினது அன்னதானச்சாலையும், மகாஜனங்களின் மனோல்லாச மேன்மையும் காணக்காண என்ன ரம்மியமாகத் தெரிகிறது. யோசிக்க, இந்திரபுரி, இல்லை நமது குபேரபுரியும் இதற்கீடல்லவென்றே சொல்லலாம்.

## பாட்டு

(பாமரத்தனமாயிருக்குது என்ற மெட்டு)

கண்ணிகள்

பார்க்க சிலாக்யமாம் காவிரிப்பூம்
பட்டினப் பெருமை-மேவ்
ருர்க்குக்கிடைக்கும் எற்கும்நம்மவ
தாரத்தி னருமை (பார்)

ஆதிந்தன்ரத சாரதிக்கெதி
ராடு நற்கொடியே-வெகு
சோதித்தண்மதி மேற்செலும்வழி
துலங்கு மாடியே (பார்)

உயரஞ்சிகரக் கும்பந்தோனும்
உன்னத உப்பரிகை-அதி
சயமிதுவென மாகதநிழ
லடிக்கும் பொற்சரிகை (பார்)

கடலு நதியுங்கலந்து தொனிக்குங்
கான மோகனமே-இவ்
விடமிதிற்பிறந் திடுமொருபெயர்
எனக்கு மாகனமே (பார்)

வ-ம்:—இவ்விதமகிமை வாய்ந்த இக்காவிரிப்பூம்பட்டினத்தில், சைவ சமயப் பற்றுதலுடையவரும், வைசியகுலதிலகரும், மகா தனேஸ்வரருமான, சிவநேசஞ் செட்டியாரவர்கள் திருமனைவி ஞானகலாம்பிகை அம்மையார் வயிற்றிற் பிறந்து வளர்ந்து இல்லறம் புரிந்து பின் நல்லறம் புனைந்து, கொண்ட கருத்தை முடித்து, பகவான் பகர்ந்தவண்ணம் பரமபதம் பெறலாம்.

[போகின்றனர்]

(சீன் முடிவு.)

---

சீன்—3. இடம்:—கல்யாண மண்டபம்.

நடிகர்:—திருவெண்காடர், சிவகலை, ஞானகலாம்பிகை, புரோகிதர், மீனாக்ஷியம்மை, செட்டிப்பிள்ளைகள், செட்டிப்பெண்கள், முதலியோர்.

[கல்யாண மண்டபத்தில் சாமக்கிரியைகளுடன் புரோகிதர் பந்து ஜனங்கள் அமர்ந்திருத்தல்.[

நடராஜ செட்டி. வசனம்:—ஓய், சிவராமன் செட்டியாரே! என்ன சமாச்சாரம்; நாழிகை என்ன ஆகிறது. எப்போதுகாணும் திருவெண்காடர் கலியாணத்திருப்பூட்டுகிறது.

சிவராமன் செட்டி. வ-ம்:—என்னங்காணும் வள வள வென்றுளறுகிறீர்; இன்னும் வரவேண்டியவர்கள் வரவேண்டாமா. (எதிர்ப் பார்த்து) அதோ பார்த்தீரா நமது நாட்டாண்மை நமசிவாயஞ்செட்டி இப்பொழுதுதான் வருகிறார்.

[நமசிவாயஞ்செட்டி வெளிவந்து]

நமசி. வ-ம்:—யார் வோய்! நடராஜஞ்செட்டியாரே; சிவராமஞ்செட்டியாரே; மேளமெங்கே; தாளமெங்கே; கலியாணப்பெண் கலியாணப்பிள்ளை எங்கே; புரோகிதரெங்கே போய்க்கூட்டி வாங்காணும்.

பசுபதிசெட்டி. வ-ம்—ஓய் நாட்டாண்மைக்காரரே; உம்மால்தான் காணும் எல்லாங்கெட்டுப்போறது நீர் இவ்வளவுநேரம் பொறுத்து வந்தீரே.

[பட்டினத்தார் தமக்கை மீனாக்ஷி வெளிவந்து]

மீனாக்ஷி. வ-ம்:—தகப்பனில்லாத பிள்ளை எல்லோரும் அருகிருந்து காலாகாலத்தில் கலியாணத்தை நடத்துங்கள்.

புரோகிதர். வ-ம்:—ஆச்சி, மணியாச்சிகூட்டி வாரும் பிள்ளையையும், பெண்ணையும்.

நமசி. வ-ம்:—ஓய் நடராஜன் செட்டியாரே! பெண்ணையும் பிள்ளையும் அழைத்து வாருங்காணும் முகூர்த்தவேளை ஆகிவிட்டது.

[திருவெண்காடர் சிவகலையும் வெளிவருதல. இருவருக்கும்விவாகம் நடக்கிறது. எல்லோரும் பாடுதல்]

பாட்டு

(ஷாதிகேசமன்மேரே என்ற மெட்டு)

சோபனப்ரதானமான மாலைசூடுவோம்
மாலைசூடுவோம் மண மாலைசூடுவோம்
தோணுமே மகா கல்யாணமே

சுகவாசம் பிரகாசம்
ஜனநேசம் சந்தோஷம்
ஜோபிதம் ஜோபிதம்
சொல்லும் ராஜபூஜிதம் (சோ)

க்ஷேம மேதரும்வி வாகமே
திருநாளும் பெருவாழ்வும்
திருமாலும் புகழ்போலும்
செல்வமுங் கல்வியுந்
தேக ஆரோக்யமும் (சோ)

(சீன் முடிவு.)

---

சீன்—4. இடம்:—திருவெண்காடு க்ஷேத்திரம்.

நடிகர்:—ஞானகலாம்பிகை, திருவெண்காடர், சிவகலை, காவலன்.

[திருவெண்காடர் தாயார் மனைவியுடன் திருவெண் காட்டீச்சுரனை சேவித்தல்]

பாட்டு

(பரணையின்மேல் நானமர்ந்து என்ற மெட்டு)

கண்ணிகள்

சோதியே சுயம்ப்ரகாசா சுத்த சைதன்யவிலாசா
ஆதியே அமரர்க்கீசா அப்பனே ஒப்பில்லாநேசா
நீதியே கைலாசவாசா நிர்த்தனே தில்லைநடேசா
தீதிலா வரமருள்செய் திருவெண்காட்டுறை எந்தேவே (சோ)

காலனே கபாலமேந்துங் கையனே காளகண்டனே
கோலனே வுமையாளொடுங் கூத்தனே தோலுரித்தோனே
மேலனே அடியாரேற்று மெய்யனே பொன்னார்ந்தமேனி
சீலனே எம்மைக்காப்பாற்றுந் திருவெண்காட்டுறை எந்தேவே(சோ)

[பரமனைப்பணிந்து ஆலயத்துள்ளஸ் தம்பத்தருகில் மூவரும் அமர்கின்றனர்]

ஞானக. வ-ம்:—அப்பா, அருமைக்குழந்தாய் நம்மைக் காப்பாற்றும் அம்மையப்பனும் எம்பெருமானுனை வெண்காட்டீச்சுரனைப் போற்றிப் பணிந்து, அவனடியாருக்கு அன்னதானம் செய்வதைவிட வேறு வேலை நமக்கில்லை. இதுவே நமது ஜென்ம விமோசனமாம்.

திருவெண். வ-ம்:—தாயே தங்களுத்திரவின்படியும், காலஞ்சென்ற எனது தந்தை சிவநேசருடைய கட்டளைப்படியும், இன்றுவரை எம்பெருமான் திருப்பணியைச் சரிவரச் செய்தும் அடியார்களுக்குஇல்லை என்னாது அன்னமளித்தும் இல்லறதருமத்தை இல்லாளாகிய சிவகலையுடனிருந்து, ஈடேற்றிவருகிறேன். எனினும்.

## திருவெண்காடர் பாட்டு

(அருகினில் வாமகனே என்ற மெட்டு)

பல்லவி

துதிபெறு வென்தாயே—நான்
சொலுவதைக் கேளினியே (துதி)

அநுபல்லவி கண்ணிகள்

அதிதிகளெனுமவர் களையுபசரிக்க
அடியவர் தமக்குநல் லன்னமும் சமைக்க
பதிபுகழன்னதானப் பலனது பெருக்க
பகருநம் மனைதனிற் பணமிலை எடுக்கத் (துதி)

தனமுந் தானியமெல்லாந் தான் செலவாச்சு
தனக்கென்றிருந்த பணந் தருமத்திற் போச்சு
மனமது வருந்திடு மார்க்க முண்டாச்சு
வகையென்ன செய்வது வழுத்துமிப் போது(துதி)

வ-ம்:—தாயே நாளையதினம் அடியார்களுக்கு அன்னமிடுஞ் செலவுக்குப் போதிய பணமில்லை; வீட்டிலிருந்த தானிய வகைகளுஞ் செலவாயின. வேறிடத்திற் கடன் வாங்குதலும் பொருந்தாது.

நமதந்தஸ்திற்குப் பிறரிடத்திற் கடன் கேட்பதுங் கூடாது. அன்னதானத்தையும் நிறுத்தப்படாது. இதைக்குறித்துச் சிந்தித்து நேற்றிரவு படுத்துறங்குஞ் சமயம் திருவெண்காட்டீச்சுரர் என் கனவில்தோன்றி வேண்டிய பொருள் வீட்டிலிருக்கிறது. விசனத்தை விடு எனப் புகன்று சென்றது புரியவில்லை.

ஒருக்காலெனது நினைவே கனவானதோ எவ்விதமாயினும் நாளைய தினம் அடியார்களுக்கு அன்னதானம் நடத்தும் மார்க்கந் தோன்ருது விசனிக்கிறேன்.

## ஞானகலாம்பிகை—விருத்தம்

தானமே புரிவதற்குத் தயங்குவ தேனோ நம்மை
வீனமில் லாதுகாக்கும் வெண்காட்டின் விமலனுண்டு
கானமாம் ஞானம்பெற்ற காடனே எனதுமைந்தா
ஆனதை நினைந்திடாது ஆவதை கவனிப்பாயே.

வ-ம்:—குழந்தாய் உன் தந்தையார் வைத்த குபேர சம்பத்தனைத்தும் அன்னதானத்திற்குச் செலவானதேயன்றி வீணாக விரயமாகவில்லை. இது விஷயம் நம்மனோ தெய்வமறியும். இதற்கான பலன் கைமேற் பலிக்கும் சந்தோஷமாகவே நம் நகரப்போகலாம்வா.

[காவலன் ஓடிவருகிருன்]

காவலன், வ-ம்:—சுவாமி! நமஸ்காரம்.

திரு. வ-ம்:—ஆசீர்வாதம் விஷயமென்ன

ஞான. வ-ம்:—அப்பா,—எதற்காக இத்தனைத் துரிதத்துடன் ஓடிவந்தாய். காவிரிப்பூம்பட்டினத்தில் ஏதாவது விசேஷமுண்டா.

காவ. வ-ம்:—அம்மா, நேற்றிரவு தாங்கள் வீட்டைவிட்டு வெளியேறிய பிறகு, சர்வ ஜாக்கிரதையாக நான் பாதுகாத்திருந்தேன். விடிந்தெழுந்து வீட்டுவேலைகளைக் கவனிக்கவேண்டி கதவைத் திறந்து வீட்டைப்பார்க்க எங்குபார்க்கினும் பொற்குவியல்களாகத் தோற்றுகிறது. இந்த அபூர்வ அதிசயத்தைக் கண்டு மயங்கி வீட்டைத் தாளிட்டுக்கொண்டு தங்களிடம் இவ்விஷயத்தைத் தெரிவிக்கவே ஓடிவந்தேன்.

[ஞானகலாம்பிகை யோசித்து]

ஞான. வ-ம்:—அப்படியா அதிவிரைவாகச்சென்று இல்லமணுகி எப்போதும்போலிரு. எவரிடத்தும் இவ் விஷயத்தைத் தெரிவிக்காதே. இதோ நாங்களும் உடனே வருகிறோம்.

[காவலன் போகிருன்]

### ஞானகலாம்பிகை பாட்டு

(பிகடிபனுதோ என்ற மெட்டு)

கண்ணிகள்

மகனே திருவெண் காடா
மகராஜ ராஜவி சேடா
சுகனேநீ கண்ட கனவு
துலங்கு மேனேவிண் கினேவு (மக)

வெண்காட் டீச்சுர நாதன்
விக்ன மகற்றும் பாதன்
கண்காட் டியேகாப் பாற்றும்
கவலை தவிர்த்தீ டேற்றும் (மக)

வ-ம்:—அப்பா திருவெண்காடா நீ கண்ட சொற்பனப் பலனைப் பார்த்தனேயா. கடவுள் அநுக்ரகத்தால் நாம் செய்யவேண்டிய தருமம் கெடாவண்ணம் செலவுக்கு வேண்டிய பொருளை பகவான் கொடுத்திருக்கிறார். நம் வீட்டுக் காவலன் கண்டு வந்து சொன்ன விஷயமிதுவே. போய்ப்பார்ப்போம் வா.

[போகின்றனர்]

சீன் முடிவு.

---

சீன்—5. இடம்:—வெண்காடர் வீடு.

நடிகர்:—திருவேண்காடர், சிவகலை, ஞானகலாம்பிகை, காவலன், அடியார்கள்.

[அன்னதான மேற்க அடியார்கள் வெண்காடர் விடுதிக்கு வருகின்றனர்]

[சச்சிதானந்த சங்கமர் வருகிறார்]

### பாட்டு—திருப்புகழ்

பக்தர் கணப்ரிய நித்த நடித்திடு
பட்சி நடத்திய குகபூர்வ
பசூஷிம தெக்ஷிண வுத்தர திக்குள
பக்தர்க ளற்புத மெனவோதும்,—

சித்ரக வித்துவ சப்தமி குத்தநி
ருப்புக ழைச்சிறி தடியேனு
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்தவ னுக்ரக மறவேனே

கந்திய தத்தைக ளோத்து விழத்தெரி
கற்கவ ணிட்டிறை தினைகாவல்
கற்றகு றத்திநி னைத்தக முக்தடி
கட்டிய ணைத்தபன் னிருதோளா,—

சத்தியை யொக்கயி டத்தினில் வைத்தத
கப்பனு மெச்சிட மறைநூலின்
தத்துவ தற்பர முற்றுமு ணர்த்திய
சர்ப்பகி ரிச்சுரர் பெருமாளே.

[காவலன் மேற்படி சங்கமரை அழை
த்து உபசரித்து அனுப்புகிறான்]

[பகவதிப் பண்டாரம் வருகிறார்]

## பாட்டு

(வாவடி வேலவா—என்ற மெட்டு)

பல்லவி

மாம்பழனுபுரி வாழ்பண்டாரமே—நினதொரு
மயின்மிசையெதிர் வரவிதுததி (மாம்)

அநுபல்லவி—சந்தத்தொடர்

பூம்பாத சேவை தாராய்
புண்யா சிவசுப்ர மண்யா (மாம்)
பூம்பாத சேவை தாராய்
புஷ்பஞ்சேர் காவனமொளிர் (மாம்)

பூம்பாத சேவை தாராய்
பூசித்தே னுனேவிசு
வாசித்தே னிருபதம்
நேசித்தே னருள்புரி (மாம்)

சரணம்

காமாந்தகாரமென்னுங் கஷ்டநீக்கியருள்புரிவாய்
கார்வண்ணன் மருகா முருகா
கார்வண்ணன் மருகா
சீமா செந்தமிழ்த் திருப்புகழ்
சிங்கர் தரும்பிர

சங்கஞ் கவிசங்கர
லிங்கஞ் துதிசெயு (மாம்)

[காவலன் மேற்படி பண்டாரத்தை அழைத்துச்சென்று உபசரித்தனுப்புகிறான்]

[இன்னும் பல அடியார்கள் வர அன்னதானம் நடக்கிறது. நாடகம் நடத்துவோர் சமயத்துக் கேற்றபடி இந்த சீனை விஸ்தரித்துக் காட்டலாம்.]

(சீன் முடிவு.)

---

சீன்—6. இடம்:—தீர்த்தக்கரை.

நடிகர்:—சிவசருமர், சுசீலை.

[பரமசிவன் ஓர் குழந்தைவடிவுடன் வில்வமரத்தடியி லிருத்தல்]

[சிவசருமர் சுசீலையுடன் வெளிவந்து

சிவ. வ-ம்:—பெண்ணே சுசீலா! கைப்பொருளற்ற கவலையால் மனமெலிந்திருக்கும் சமயம் கடவுளாகிய கண் மூன்றுடைய வள்ளல் கனவில் தோன்றி, காருண்ய நதிக்கரை யருகிலுள்ள வில்வ மரத்தடியில் ஓராண் குழந்தை இருக்கிறது. அக் குழந்தையை எடுத்து காவிரிப்பூம் பட்டினம் திருவெண்காடரிடம் விலைக்கு விற்று, வேண்டிய பொருளைப் பெற்று செலவிட்டு ஜீவிப்பா யென்று திருவாய் மலர்ந்த வண்ணம் தீர்த்தக்கரைக்குச் சென்று வருவோம்.

சுசீலை. வ-ம்:—நாதா! ஆண்டவன் அருளியவண்ணம் அங்கு சென்று பார்ப்போம் வாருங்கள்.

[இருவரும் முன் சென்று வில்வமரத்தடியி லிருக்கும் குழந்தையைக் கண்டு]

சிவ. வ-ம்:—மாதே! ஆண்டவனுரைத்த வண்ணம் அதோ அவ்வில்வ மரத்தின் கீழிருக்கும் குழந்தையைப் பார்த்தனையா.

சுசீலை. வ-ம்:—பிராணேசா! குழந்தையைப் பார்க்க கோடிசூரியப் பிரகாசம்போ லிருக்கிறது.

[இருவரும் அருகிற் சென்று]

## பாட்டு

(வாவாகார்த்திகா என்ற மெட்டு)

பல்லவி

வாவா பாலகா—எங்கள்
மனத்துயரகற்றிடும்
வனப்பிலுதித்தமைந்தா (வா)

அநுபல்லவி—கண்ணிகள்

தேவாதிதேவன் தீனசகாயன்
சிவனாருள் பெருகுஞ்சீலா
திடத்துடன்எம திடத்திலிதுதகி (வா)

கலிதவிர்ப்பாயே கடவுளும்நீயே
கருணாகரசெந்தேனே மனங்
களிக்கவுயர்செல்வ மளிக்கஇதுதகி (வா)

[பிள்ளையை எடுத்து முத்திட்டு]

சுசீலை. வ-ம்:—அப்பா எனதாருயிர்ச் செல்வமே! அழகின்பயனே! அறிவானந்தமே! அரும்பெரும் பொருளே! அன்பின் கனியே! குழந்தாய் எங்களிருவரின் இம்மை மறுமைப் பலனுக்குதித்த இரஞ்சிதமே! கண்ணே! கண்மணியே என்கையி லிருப்பாய்.

சிவச. வ-ம்:—பெண்ணே! புத்திரனைப் பார்க்கப் பார்க்கப் பரவசமாகிறது; ஆனந்தம் பொங்குகிறது என்னைப்பனைவிட்டுப் பிரிய மனமில்லை. அய்யனின் வார்த்தையின்படி இக் குழந்தையை நான் எப்படி விற்பேன்.

சுசீலை. வ-ம்:—நாதா! பிள்ளையில்லாத பாக்கியம் இப் பிள்ளையால் தீர்ந்தது. இக் குழந்தையை விலைகூறவும் மனம் துணியுமா.

## விருத்தம்

புகழ்தரும் புத்திரப்பேர் போக்கிடக் கிடைத்த இந்த
மகன்தனை விற்பதற்கு மனமிடந் தரவுமில்லை
ஜெகமிதி லிகழுண்டாகும் சிசுஹத்தி தோஷம்சேரும்
சுகமுடன் வீட்டில்வைத்திச் சுதன்றனை வளர்ப்போம்வாரீர்.

சிவச. வ-ம்:—பெண்ணே! பிள்ளையை வீட்டில் வைத்து வளர்க்கவும் போதிய தனமில்லை. நம் வறுமையை நீக்கவன்றோ பரமன் என் கினவில்தோன்றி இக்குழந்தை இருக்குமிடந் தெரிவித்தார். பகவான் பகர்ந்தவண்ணம் நடப்பதே நன்மை. தவறி நடப்போமாகில் குழந்தையும் தவறிவிடும். பின் நமது வறுமை விலகாது வருந்தநேரும்.

சுசீலை. வ-ம்:—தாங்கள் சொல்வதும் சரியே! பரமேசனால் நமக்குக் கொடுக்கப்பட்ட பாக்கியமிது அவர் சொற்படி இப்பாக்கியத்தை நாமனுபவிப்பதே சிலாக்கியம்.

சிவச. வ-ம்:—சரி ஈஸ்வரன் கனவில் சொல்லியபடி திருவெண்காடர் வீடணுகிக் குழந்தையை விற்றுப் பொன்பெற்றுச் செல்வோம் வா. [போகின்றனர்.]

(சீன் முடிவு.)

---

## சீன்—7. இடம்:—வெண்காடர் வீடு.

நடிகர்:—திருவெண்காடர், சிவகலை, சிவசருமர், சுசீலை, சேந்தனர், காவலன்.

[திருவெண்காடர் தனியே வீற்றிருக்குஞ் சமயம் காவலன் ஓடிவந்து]

காவ. வ-ம்:—(கீழ்விழுந்து பணிந்தெழுந்து) சுவாமி நமஸ்காரம்.

திரு. வ-ம்:—ஆசீர்வாதம். விரைந்தோடிவந்த விசேஷமென்ன.

கா. வ-ம்.—சுவாமி! ஓர் பிராமணோத்தமரும், அவர் மனைவியும், ஓர் கைக்குழந்தையுடன் தங்களைக்காண வந்திருக்கின்றனர்.

[இது சமயம் உள்ளிருந்த சிவகலை வெளிவந்து திருவெண்காடரை நமஸ்கரித்து நிற்க.]

திரு. வ-ம்:—பெண்ணே சிவகலை நேற்றிரவு நான் கண்டுனக்குச் சொன்ன சொர்ப்பனப்படி, பிராமணர் குழந்தையுடன் தன் மனைவியுடன் நம்மைத் தேடிவந்திருப்பதாகக் காவலன் சொல்கின்றான். பரமேஸ்வரன் பரிசோதனையைப் பார்த்தனையா. வா நாமிருவரும் எதிர்சென்றழைத்து வருவோம்.

[இருவரும் உட்சென்று சிவசருமர் சுசீலையைக் குழந்தையுடன் அழைத்து வருகின்றனர்.]

திரு. வ-ம்:—(சிவசருமரைப்பார்த்து) சுவாமி! நமஸ்காரம் இவ்வாசனத்தி லெழுந்தருளுங்கள்.

சிவ. வ-ம்:—(சுசீலையைப்பார்த்து) அம்மணி நமஸ்காரம். தாங்களு மிவ்வாசனத்தமரப் பிரார்த்திக்கின்றேன்.

[சிவசருமர் சுசீலை இருவரும் ஆசனத்தமர்கின்றனர்]

திரு. வ-ம்:—சுவாமி! சிவபெருமான் போன்ற தவப்பெருமை வாய்ந்த தாங்களும், இவ் வம்மையாரும் எங்கள் இருஹத்திற் கெழுந்தருள நான் செய்த பாக்யமே பாக்யம். தேவரீரிருவருந் திருவுளங்கனிந்து இவ்வடியேனை.

## பாட்டு

(சிறைவாயிற் காவல் என்ற மெட்டு)

பல்லவி

தேடிவந்தக் காரணமேன் சிறியேனென்னைத் (தேடி)

அநுபல்லவி

நாடிய வரலாற்றை நவிலுவீரே நீரையா
கோடிய வார்த்தையும்பொய்யா குழந்தையுடன் (தேடி)

சரணம்

என்னுலாமுபகாரம் இயற்றுவே னிதுநேரம்
பின்னமில்லாத வேதியா பிராமணநீதியாய்த்(தே)

வ-ம்:—எவ்விஷயத்தைக் கருதி, எக்காரணத்தைக் குறித்து இவ்வில்லம் எழுந்தருளினீர். விவரத்தை யுரைக்கக் கோருகிறேன்.

## சிவசருமர் விருத்தம்

வந்ததோர் காரியத்தை வழுத்துவேன் விவரமாக
சிந்தையே மகிழ்ந்துகேளீர் சிவபெரு மான்றனுணை
இந்ததோர் புதல்வன் றன்னை இதுசமயத்தில் விற்றுப்
பந்தமே நீக்குஞ்செல்வப் பணம்பெற வேண்டித்தானே.

வ-ம்:—திருவெண்காடரே, நம்மையாட்கொள்ளுஞ் சிவபெருமானின் திருவாக்கின்படி இக்குழந்தையைத் தம்மிடம் விற்றுத்தனம் பெற்றுச் செல்லவே இங்குற்றோம்.

திருவெ. வ-ம்:—அப்படியா, மெத்த சந்தோஷம். தாங்கள் எங்கிருப்பது தங்கள் நாமதேயமென்ன. இவ்வம்மையின் பெயரென்ன.

சிவ. வ-ம்:—நாங்கள் திருவிடைமருதூரில் வசிப்பது. என் பெயர் சிவசர்மேச ஐயர். என் மனைவி இவளின் பெயர் சுசீலாதேவி.

திரு. வ-ம்:—சரி. இக்குழந்தை தங்களுடையதுதானு? இவ்வம்மையின் கர்ப்பவுதரத்துவளர்ந்து பிறந்ததுதானு.

சிவ. வ-ம்:—இல்லை. எங்களது வறுமை நோய் விலக மருதவாண னது மகிமையால் மருதூர் தீர்த்தக்கரையிலுள்ள வில்வ மரத் தடியிற் கிடைத்தது. பகவானது வாக்கியப்படியே விலை கூறி வரலானோம்.

திரு. வ-ம்:—சந்தோஷம். இக்குழந்தைக்கு நாமதேயஞ் சூட்டி னீர்களா.

சிவ. வ-ம்:—மருதவாணனது மகிமையால் கிடைத்த இம்மகவுக்கு மருதவாணனென்றே நாமம் புனைந்தோம்.

[திருவெண்காடர் குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டு.]

திரு. வ-ம்:—சுவாமி தாங்கள் விற்கக்கூடிய இக்குழந்தையின் கிரய மாகிய.

## பாட்டு

(எதுகுலதிலகா என்ற மெட்டு)

பல்லவி

விலையென்ன சொல்லுவீர்
விற்குமிந்தக்குழந் தைக்குத்தருமொரு (விலை)

அநுபல்லவி

திலகம்போலொளிர் சிவசர்மேசரே
சிந்தைமகிழுமிம் மைந்தனுக்கேற்றதோர் (விலை)

சரணம்

தலமிதிலெனக் கில்லைசந்தானம்
தந்தருளுமிக்கு ழந்தைமெஞ்ஞானம்
புலவர்போற்றுநற் புத்திரன்பாக்யம்
போதும்போதும்விற்கும் போதுமக்களிக்கும் (விலை)

வ-ம்:—சுவாமி! தாங்கள் விற்குமிக் குழந்தைக் கேற்ற விலையைத் தயவுடன் தெரிவிக்கக் கோருகின்றேன்.

## சிவசருமர் விருத்தம்

விரவிய தராசுதட்டில் விளம்புமிச் சிசுவைவைத்து
பரவிய இடைகுன்றாமல் பத்தரை மாற்றுப்பொனிட்டு
தரைதனி லெனக்குத்தந்தால் தனிமரு தூரின்சேயை
தருகுவேன் விலையீதாகும் சங்கதிதெரிவீரையா.

வ-ம்:—திருவெண்காடரே; ஓர் துலைத்தட்டிற் குழந்தையைவைத்து, மற்றொரு தட்டிற் பொன்னைக்கொட்டி இடைகுறையாமற் கொடுப்பதே இக்குழந்தைக்குரிய விலையாகும்.

திரு. வ-ம்:—நல்லது தங்களிஷ்டப்படியே தருகிறேன். (உள் நோக்கி) ஆரடா காவலன்.

[காவலன் ஓடிவந்து]

காவ. வ-ம்:—சுவாமி! நமஸ்காரம்; அழைத்த விவரமென்ன.

திரு. வ-ம்:—உடனே சென்று நமது கஜானு அதிகாரியாகிய சேந்தனைக் கண்டு, ஓர் துலாக்கோலும் பொற்காசுப் பைகளுங் கொண்டுவரும்படிச் சொல்.

[காவலன் உட்சென்று சேந்தனுடன் துலாக்கோல் பொற்காசுப் பைகள் கொண்டுவருகிறான்.]

சேந். வ-ம்:—பிரபு தங்களுத்திரவின்படி இதோ துலாக்கோலும் பொன்காசுப் பைகளுங் கொண்டுவந்திருக்கிறேன்.

திரு. வ-ம்:—(சிவசருமரைப் பார்த்து) சுவாமி! இதோ தராசுதட்டு வந்துவிட்டது. குழந்தையைத் தட்டில் வையுங்கள்.

[சிவசருமர் குழந்தையைத் துலாத்தட்டில் வைக்கிறார். திருவெண்காடர் பொற்கட்டிகளை மற்றொரு தட்டில் வைக்கிறார். இடை சமமாகாதது கண்டு]

திரு. வ-ம்:—சேந்தனாரே! இதென்ன ஆச்சரியம்? நம்மிடத்துள்ள பொன்காசுப் பைகளை வைத்தும் தட்டுமே லெழவில்லையே; இதென்ன காரணம்; என்ன மகிமை இக் குழந்தையிடத்திலிருக்கிறது.

சேந். வ-ம்:—(யோசித்து) பிரபு! இதுவும் மகிமைதான்; மருதவாணருடைய கிருபைதான். இருக்கினுந் தாங்களுஞ் சிவகலையம்மையாரும் பரமேஸ்வரனைப் பணிந்து இருவருமாக இப் பொற்காசுபையைத் தட்டிவிடுங்கள்.

## திருவெண்காடர் சிவகலை பாட்டு

### தேவாரம்

பச்சைநிற முடையார்பாலர் சாலப்
பழையர் பிழையெலாம் நீக்கியாள்வர்
கச்சைகத நாகம் பூண்ட தோளர்
கலனென்று கையேந்தி இல்லந் தோறும்

பிச்சைகொள நுகர்வர் பெரியர் சாலப்
பிறங்குசடை முடியர் பேணுந் தொண்டர்
இச்சைமிக அறிவர் என்று முள்ளார்
இடைமருது மேவி யிடங் கொண்டாரே.

## வேறு பாட்டு

(சிதம்பர தேரிசனமா என்ற மெட்டு)

பல்லவி

திருவிடைமருதூரா திருவடித்
தெரிசனமது தாராய் (திரு)

அநுபல்லவி

கருவிடைப் புகுந்திடாக் கண்ணருள் சுரந்திடாய்
அருள்தருமாமணி யாணமாதேவநீ
ஆண்டவனே தில்லைத்
தாண்டவனே எங்கள்
அம்பிகைபாகாமகா லிங்கசுலோகானகா (திரு)

சரணம்

பிரம்மதோஷநிவாரணு ஜெகம்
பேசுமாவாபரணு
தர்மசங்காலிங்கந் தமிழ்ச்சங்கீதப்ரசங்கந்
தங்குஞ்ஜகத்காரணு சர்வபரிபூரணு
தாயகனே காமி
நாயகனே அருள்
தாராயிதுசமயம் காராயிதுதருணந் (திரு)

[திருவெண்காடர் சிவகலை இருவருந் துலாக் கோலை சுற்றிவந்து பொன்காசுப்பையை வைக்க இடை சமமாகின்றது]

சிவ வ-ம்:—திருவெண்காடரே. இடை சரியாய்விட்டது. தடையின்றித் தாங்களிக் குழந்தையை வாங்கிக்கொள்ளலாம்.

திரு. வ-ம்:—உத்திரவுபோல் (சிவகலையைப் பார்த்து) நாயகி குதூகலத்துடன் குழந்தையைப் பெற்றுக்கொள்.

[சுசீலை குழந்தையை சிவகலையிடம் கொடுக்க வாங்கிக்கொண்டபின்]

சிவ. வ-ம்:—வெண்காடரே! எங்கள் வேலை முடிந்தது நாங்களிருவரும் இடைமருதுக்குச் செல்ல விடையளிக்கவேண்டும்.

திரு. வ-ம்:—சுவாமி; இவ்வளவு பொற்காசுப்பைகளுடன் தாங்கள் தனி வழிபோதல் தகாது. துணைக்காக வண்டிகளும் காவலாளிகளையும் அனுப்புகின்றேன். வாருங்கள் போகலாம்.

[எல்லோரும் உட்போதல்]

(சீன் முடிவு.)

---

சீன்—8. இடம்—பள்ளிக்கூடம்.

நடிகர்:—உபாத்தியாயர், மருதவாணர், அருணகிரி, அருணாசலம், அண்ணாமலை, அருணேசன், அம்பலத்தாடி.

[பிள்ளைகள் பாடம் படித்துக்கொண்டிருக்கின்றனர். உபாத்தியாயர் வெளிவந்து நிற்கின்றார். பிள்ளைகள் சகலரும் வந்தனம் செய்கின்றனர்.]

பிள்ளைகள் பாட்டு

(பாதம்பணிந்தோமையா என்ற மெட்டு)

பல்லவி

வந்தனந்தந்தோமையா எங்கள்
வாத்தியாரையா (வந்)

அநுபல்லவி

வந்தனந்தந்தோம் வந்தனந்தந்தோம்
வந்தனந்தந்தோம் ஆசீர் வாதந்தாரும்
வாத்தியாரையா (வந்)

சரணம்

தாய்தந்தைநீரே சற்குருநீரே
சந்தோஷமாக எம்மைத் தற்காப்பீரே
வாத்தியாரையா (வந்)

வாத். வ-ம்:—எல்லோருக்கும் ஆசீர்வாதம். அவரவர் ஸ்தானங்களில் அவரவரமருங்கள்.

[சகலரும் அமர்கின்றனர்]

உபா. வ-ம்:—அடே; அருணகிரி இப்படி வாடா.

அருணா. வ-ம்:—இதோ வந்தேன் சார்.

உபா. வம்:—ஏனடா சென்றமாதச் சம்பளமின்னுங் கொடுக்காதிருக்குங்காரணமென்ன?

அரு. வ-ம்:—அந்த விஷயம் எனக்குத் தெரியாதுங்கோ எங்கம்மாளைக் கேட்டுச் சொல்றேங்கோ.

உபா. வ-ம்:—அம்மாளைக் கேட்டால் பணங் கொடுக்கமாட்டாள். அப்பாவைக் கேட்டு வாங்கி வாடா.

அரு. வ-ம்:—இதோ போய்வரேன் சார்.

உபா. வ-ம்:—ஓஹோ விட்டால் போதும்போலிருக்கிறது. முட்டாளே! உட்கார்ந்து பாடம் படியடா. இன்றிரவு அப்பாவைக் கேட்டு வாங்கி நாளை காலை கொண்டு வா.

[அருணகிரி உட்கார்ந்தவுடன் அருணாசல மெழுந்து]

அருணா. வ-ம்:—வாத்தியாரையா! நேற்று நீங்கள் கொடுத்த பாடங்களெல்லாம் படிச்சுட்டேன். வேறே பாடம் சொல்லிக் கொடுங்க.

உபா. வ-ம்:—வேறு பாடம் சொல்வதிருக்கட்டும். நேற்று மாலை நீ வீட்டுக்குப் போகும்போது நான் சொல்லி யனுப்பியதென்ன; கொண்டுவந்தாயா?

அருணா. வ-ம்:—ஆமாம்; ஒரு சொரக்கா கொண்டுவரச் சொன்னீங்கோ எங்கம்மாவிடங் கேட்டேன் உங்களே நேரில்வந்து வாங்கிக்க சொன்னுங்கோ.

உபா. வ-ம்:—அப்படியா? உன்னிடத்தமர்ந்துன் பாடத்தைப் படியடா. [அருணாசலம் அமர்ந்ததும்]

உபா. வ-ம்:—அடே அண்ணாமலே இங்கு வாடா.

அண்ணா. வ-ம்:—சார் என்னே அடிக்காதுங்கோ. நேத்திக்கி நீங்க சொன்ன சேதி ஞாபகமிருந்தது ஒரு சொமை வெறவு கெட்டி வைச்சிருக்கேன் இன்னிக்கி ராவைக்கு நம்ம வூட்டுக்கு தூக்கி வந்து போட்டுடுறேன் சார்.

உபா. வ-ம்:—சரி சரி நல்ல பிள்ளைதான் சீக்கிரம் பாடம் படித்தாகட்டும். [அண்ணாமலை விலக, அருணேசன் முன்வந்துநின்று அழுகிறான்.]

உபா. வ-ம்:—ஏனடா அருணேசா! எதற்காக இப்படி அழுகின்றாய். உன்னை யார் என்ன செய்தார்கள்.

அருணே. வ-ம்;—என்னே கேக்காதிங்கோ. நம்ப அம்பலத்தாடியைக் கேளுங்க.

உபா. வ-ம்:—அடே அம்பலத்தாடி! என்னடா விஷயமிது. விஷயமா அல்லது விஷமமா.

அம். வ-ம்:—விஷயமுமில்லே விஷமமுமில்லே இன்னிக்கி காத்தாலே நானும் அருணுசலமும் ஏரிக்கு போனேம் போனமா, அப்புபறம் அவனே கேளுங்கோ.

அருணு. வ-ம்:—அங்கே வெளிக்கு போனேம் பின்னே காலலும்பி பல்தேச்சோம்; பின்னே குளிச்சோம். அங்கே அம்மா வந்தாங்கோ பின்னே அவனே கேளுங்க.

அம். வ-ம்:—அம்மா வந்தாங்களா குளிச்சாங்கோ கொடந் தேச்சாங்கோ, தண்ணிபுடிச்சாங்கோ, பொடவெ தொவச்சாங்கோ, அப்புறம் என்னே பாத்தாங்கோ, அப்புறம் அவனே கேளுங்கோ.

அருணு. வ-ம்:—என்னே கூப்பிட்டு கொடந் தூக்கிவரச் சொன்னுங்கோ நானு இவனே தூக்கச்சொன்னேன் சொன்னேனு.

அம். வ-ம்:—சொன்னுனு நான் தூக்கிவந்தேன் எம் பின்னுலே இவன் வந்தான். இவன் பின்னுலே அம்மா வந்தாங்கோ வந்தாங்களா அங்கே அவுரு வூடு இல்லிங்கோ அதுவுள்ளே போயிட்டாங்கோ. இவன் அங்கியே இருந்தாங்கோ.

அருணு. வ-ம்:—இருந்தேங்கோ. ரொம்ப நேரமாச்சுங்கோ. அம்மா தோசைகிசை துண்ணுட்டு வெளியே வந்தாங்கோ எனக்கு ஒரு இட்டெலி கொடுத்தாங்கோ.

அம். வ-ம்:—கொடுத்தாங்க. எனக்கு பாதி கொடுக்கச்சொன்னுகோ. இவன் எல்லாந் துண்ணுட்டு நான் கேட்டா அடிக்க வரானுங்கோ. (அழுகிறுன்)

அருணு.வ-ம்:—இல்லிங்கோ சார் சும்மா சொல்லுரானுங்கோ (அழுகிறுன் எல்லோரும் நகைக்கின்றனர்.)

உபா. வ-ம்:—போதும் உங்கள் விளையாட்டுப்போய் அமருங்கள் கழுதைகளே.

[இருவரும் விலகமருதவாணன் வருதல்]

## மருதவாணன் பாட்டு தேவாரம்

மாதர்பிறைக் கண்ணியானை மலையன் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேற்றிப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ்சுவடு படாமல் வையா றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடுங் களிறுவருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங்
கண்டறி யாதெனக் கண்டேன்

[வெளிவந்து உபாத்தியாயரை யணுகி]

மருத. வ-ம்:—ஐயா, நமஸ்காரம்.

உபா. வ-ம்:—ஆசிர்வாதம் அப்பா மருதவாணா. இப்படிவா என்ன ருகிலுட்கார்.

[மருதவாணருபாத்தியாயருகிலுட்கார]

உபா. வ-ம்:—நேற்று நான் சொல்லிக்கொடுத்தனுப்பிய பாடங்களை மனனஞ்செய்து விட்டாயா.

மரு. வ-ம்:—தங்களுத்திரவின்படி படித்து மனனஞ்செய்திருக்கிறேன்.

உபா. வ-ம்:—மனனஞ்செய்த பாடத்தை சொல் கேட்கலாம்.

## மருதவாணர் பாட்டு

(வர்த்தகர் குலத்துதித்தமாரா என்ற மெட்டு)

கண்ணிகள்

பக்திமார்க்க மாம்பஜனை பாடு-நல்ல
பரமசா துக்களைகொண் டாடு-ஆதி
சக்திசிவன் திருப்பதம் நாடு-ஜென்ம
சாபல்ய மாகும்வழி தேடு (பக்)

வீணிலென்று மேகொர்வங் கொள்ளாதே-மேலோர்
விரித்துரைத் தமொழி தள்ளாதே-எதிர்
காணுமெமன் முன்னிது செல்லாதே-எந்தக்
காலத்தும் பொய்மொழி சொல்லாதே (பக்)

நீர்க்குமிழி போலிந்தக் காயம்-ஒரு
நிமிஷத்தில் வருகும பாயம்-கண்ணால்
பார்க்கும் பொருளனைத்து மாயம்-நல்ல
பரகெதி பெறவிது பாயம் (பக்)

உபா. வ-ம்:—சரி! சரி!! ஒரு பிழையுமின்றி உள்ளதை உள்ளபடிச் சொல்லிவிட்டாய். இன்றையதினம் சொல்லிக்கொடுக்கும் பாடத்தையும் சரிவர கவனித்துக்கொள்.

[உபாத்தியாயர் முன் சொல்லமருத வாணர்பின் சொல்லுதல்]

## தேவாரம் பாட்டு

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை விடையேறி
பூதஞ்சூழ பொலிய வருவார் புலியை யுரிதோலார்

நாதாஎனவும் நத்தா எனவும் நம்பா வெனநின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே.

[பாடம் முடிகிறது]

உபா. வ-ம்:—இடைவேளை போஜனத்திற்கு நேரமாகிறது. எல்லோரும் சென்று வாருங்கள்.

(சீன் முடிவு.)

---

## சீன்—9. இடம்:—வெண்காடர் வியாபாரவிடுதி.

நடிகர்:—திருவெண்காடர், பரமேஸ்வரன் செட்டி, பழனியப்பன் செட்டி, பரசுராம செட்டி, மருதவாணர், காவலன்.

[ஓராசனத்தில் வெண்காடரமர்ந்து வாசித்துக் கொண்டிருக்குஞ் சமயம் காவலன் விரைந் தோடிவந்து வீழ்ந்து பணிந்தெழுந்து]

காவ. வ-ம்:—பிரபு! நமஸ்காரம்.

திரு. வ-ம்:—ஆசீர்வாதம்; விசேஷமென்ன.

காவ. வ-ம்:—சுவாமி! தங்களைக் கண்டுபேச இரத்தின வியாபாரிகளாகிய செட்டிமார்கள் வந்திருக்கின்றார்கள்.

திரு. வ-ம்:—தடையில்லாமல் அழைத்து வருவாய்.

[காவலன் உள்ளே சென்று செட்டிகள் மூவரையும் அழைத்து வருகிறான்]

திரு. வ-ம்:—எல்லோருக்கும் நமஸ்காரம். சகலரும் ஆசனத் தமருங்கள். [எல்லோரும் உட்கார]

திரு. வ-ம்:—மும்மூர்த்திகள்போல் வந்த தாங்கள் மூவரும் இருப்பதெந்தவூர்; தங்கள் நாமதேயமென்ன; அடியேனை நாடி வந்த காரியமென்ன.

பரமேஸ். வ-ம்:—நாங்களிருப்பது காரைக்கால். இரத்தின வியாபாரிகள். ஓர் ஒப்பற்ற முத்து எங்களிடமிருக்கிறது. அம்முத்தைச் சமுகத்தில் விலைகூறிப் போகவே இங்கு வந்தோம்.

பழனி. வ-ம்:—என் பேர் பழநியப்பன் செட்டி. காரையிலேயே வசிப்பது விற்பதற்கியலாத விலையுயர்ந்த முத்தொன்றைத் தங்களிடம் மதிப்பிட்டு விற்பனைக கியயந் தெரிந்து போகவே இங்கு வந்தேன்.

பாச. வ-ம்:—வெண்காட்டடிகளே தாங்களும் எங்களைப்போல் செட்டிப்பிள்ளையே யாயினும் நவரத்தினங்களை மதிப்பிடக்கூடிய திறமை தங்களுக்கிருப்பதை யுணர்ந்து, தங்கள் சமூகத்தை நாடி நாங்கள் வந்தோம்.

## திருவெண்காடர் விருத்தம்

மரகதம் பவளம் நீலம் வச்சிரம் பதும ராகம்
விரவிய தாளமேகோ மேதகம் புருட ராகம்
உரவிய காந்தி விட்டே வுமிழும் வைடூரி யந்தான்
பெருகிய நவம ணிக்குப் பேரிவை யாகுந் தானே.

வ-ம்:—என்பதுபோல், நவமணிகளில் எம்மணியை என் பார்வைக்குக் கொண்டு வந்தீர்கள்.

பரமே. வ-ம்: ஐயா! எமது வசம் முத்துச்சலாபத்திலிருந்து கிடைத்த அருமை முத்தொன்று எவ்வர்த்தகராலும் விலைமதிக்க வொண்ணும லிருக்கிறது. அதைத் தங்களிடம் காட்டி, மதிப்புக்கேற்ற பொருள் பெற்றுச் செல்லலாமென்று வந்தோம்.

திரு. வ-ம்:—சந்தோஷம் எதோ அம்முத்தைக் கொடுங்கள் பரிசோதித்துப் பார்ப்போம்.

[பரமேஸ்வரன் செட்டி முத்தை எடுத்து திருவெண்காடரிடங் கொடுக்க, அவர் சிறிது நேரம் அம்முத்தை பரிசோதித்துப் பார்த்து]

## திருவெண்காடர் பாட்டு

(நம்பிக்கைகோண்டேல்லோரும் என்ற மெட்டு)

பல்லவி

முத்தின்கிரயமதைச் சித்தமகிழ்ந்துரைக்க
மூவர் வருவரோ
மூவர் வருவரோ—வேறு
தேவர் வருவரோ (முத்)

அநுபல்லவி

இத்தரை தனிலினை யுண்டோ-மற்ற
இராஜர்கள் கிரீடத்தி லுண்டோ-இதை
எடுத்துப் பார்க்குமளவில் கொடுக்கும் பொருளதனை
இயம்புவாருண்டோ (முத்)

பதிஞயிரம்பொன் தரு — வேலே-இதைப்
பார்த்துமயங்கலா — னேனே-அந்தப்
படிக்குப்பத்திரந்தந்து — முடித்துக்கிரயம்பெற
பகர்வீர் வாக்கியம் (முத்)

வ-ம்:—இம்முத்தைப்பார்க்க; மூவரையும் மற்ற தேவரையும், பூவுலகத்துற்ற யாவரையும் மயக்கும மகிமைபொருந்தியதாகவே காண்கிறது. என் மதிப்புக்குப் பதிஞயிரம் பொன் கிரயமாகக் கொடுக்கலாமெனத் தோற்றுகிறது. உங்களுக் கபிப்பிராயமிருக்குமாஞல் பத்திரமெழுதிக் கொடுத்துப் பணம் பெற்றேகலாம்.

பழனி. வ-ம்:—சரி! வியாபாரிகளிற் சிறந்தவரும் எங்கள் குலத்து வைசியர்களுக்குக் கோடீஸ்வரருமாகிய தங்கள் வார்த்தைக்குத் தடையில்லே.

[இதுசமயம் மருதவாணர் பள்ளிக்
கூடத்திலிருந்து சுவடியுடன் வரு
கிருர். வெண்காடரைப்பார்த்து]

மருத. வ-ம்:—அப்பா நமஸ்காரம்.

திரு. வ-ம்:—ஆசீர்வாதம். மருதவாணு! உட்சென்றுண் டிளேப்பாறிவா.

மருத. வ-ம்:—அப்பா! நான் தலேவாயலில் வருஞ்சமயம் பதிஞயிரம் பொன் தருகிறேன் என்று தாங்கள் சொல்வதைக்கேட்டு வந்தேன். அதன் காரணமென்ன?

[திருவெண்காடர் மருதவாணரிடம்
முத்தைக்காட்டி]

78505

திரு. வ-ம்:—அப்பா! இதோ வீற்றிருக்கும் வியாபாரிகளாகிய இவர்கள் இம்முத்தை விலேமதித்து விக்கிரயஞ்செய்து கொள்ளும்படி என்னேக்கேட்டார்கள். நான் இம்முத்தைப் பரிசோதித்துப் பதிஞயிரம் பொன் விலேபெறுங் கொடுக்கிறேனென்று சொன்னேன். இதுவே இங்கு நடந்த விஷயம். இதோ அம்முத்தைப் பார்.

[மருதவாணர் முத்தைக்கையில் வாங்
கிப் பார்த்து]

மருத. வ-ம்:—ஏனப்பா! இம்முத்துக்கா பதிஞயிரம் பொன் விலே மதித்தீர்கள்.

திரு. வ-ம்:—ஆமாம்.

4

O-1892M5L7,P
N34

மரு. வ-ம். இம்முத்து அவ்வளவு விலைபெறாது பதினாயிரம் செம்புக் காசும் விலைகொடுக்கத்தரமற்றது.

[மற்ற வியாபாரச்செட்டிகள் மனம் பிரமித்து மருதவாணரைப் பார்க்கின்றனர்.

## திருவெண்காடர் விருத்தம்

சலாபத்திற்குளித்த முத்து சகலரா ஜாங்கமெல்லாம்
விலையிடற் கேலாமுத்து வேதன்விண்ணவ ரானாலும்
திலகமாய்ப் போற்றுமுத்தின் திறமையை யறிந்திடாது
பலவிதமாக நீதான் பாஷிப்பதேனோ வாணா.

வ-ம்:—மருதவாணா! இம்முத்தின் அருமை பெருமையை நீ அறிய மாட்டாய், இம்முத்தைச் சாமான்யமாகக் கருதாதே. நம் வீட்டிலுள்ள நவரத்தினக் குவியல்களில் இதுபோல் ஓர்முத்து கிடைப்பது கஷ்டம், இதனுடைய தாரதம்மியம் உனக்குத் தெரியாது. இது விஷயத்தில் நீ தலையிடவேண்டாம். உட்சென்று உண்டிளைப்பாறிப் பள்ளிக்கூடம் போ.

மருத. வ-ம்:—அப்பா! நான் பள்ளியில் வாசிக்குஞ்சிறுவனாயிருந்தாலும், தங்களுடைய ஆசீர்வாதத்தால் தாங்கள் செய்யும் ரத்தினப் பரீக்ஷையையும் சிறிது தெரிந்து வைத்திருக்கின்றேன். தந்தையறிவு. மகனறிவு. என்பதுலகமொழியல்லவா?

திரு. வ-ம்:—அப்படியானால் உன் அபிப்பிராயப்படிக்கு இம் முத்திற்கு என்னவிலை கொடுக்கலாம். அதையாவது மதித்துச்சொல் பார்ப்போம்.

மரு. வ-ம்:—இம்முத்து ஒரு செம்புக்காசும் விலைதாளாது வேறொன்றுக்கும் உதவாது.

திரு. வ-ம்:—காரணமென்ன?

மரு. வ-ம்:—இதில் நீரிருக்கிறது.

திரு. வ-ம்:—நீயதை எப்படித் தெரிந்தாய்.

மரு. வ-ம்:—இதோ காட்டுகிறேன்.

[மருதவாணர் முத்தைவுடைத்துக் காட்டுகிறார். திருவெண்காடரும் மற்றைய செட்டிகளும் ஆச்சரியப்படுகின்றனர்.]

பழநி. வ-ம்:—வெண்காடரே! தங்கள் பிள்ளை வார்த்தையே பலித்தது. நாங்களும் இம் முத்தைப் பெரிதாக எண்ணியே மோசம் போனோம்.

திரு. வ-ம்:—தங்கள் வார்த்தையை நம்பி நானும் மோசம்போக இருந்தேன். மருதவாணன் என் மனமயக்கத்தை மாற்றினுன் எதுவோ தாங்கள் என்னை நாடி வந்ததற்கு அநுகூலமாகக் கைச்செலவிற்குத் தருகிறேன் சந்தோஷமாகப் பெற்றுச் செல் லுங்கள்.

பா. வ-ம்:—உத்திரவு மாரேம் போகலாம் வாருங்கள்.

[எல்லோரும் போகின்றனர்.]

(சீன் முடிவு.)

---

சீன்—10. இடம்—வெண்காடர் வீடு.

நடிகர்:—திருவெண்காடர், சிவகலையம்மன், மருதவாணர்.

[திருவெண்காடரும் சிவகலையும் தனித் திருக்குந் தருணம்]

திரு. வ-ம்:—பெண்ணே சிவகலை! நமது நகர வைசியப் பிள்ளைகளிற் சிலர் கப்பல் வியாபாரம் செய்யச் செல்வதைக் கேள்வியுற்ற நமது மைந்தன் மருதவாணனும் அவர்களுடன் கலந்து, அயல் நாடு சென்று வியாபாரஞ் செய்து வருவதாகச் சொல்கிறுன். இதுவிஷயத்தில் உன தபிப்பிராயம் என்ன.

சிவகலை விருத்தம்

பட்டினத் தவர்கள்போற்றும் பாக்கியம் நமக்கிருக்க
விட்டயல் நாடுசென்று வியாபாரஞ் செய்வதேனே
செட்டிமார் குலத்துக்கேற்ற செயலிது வாகினும்
கட்டுரை பேசுமைந்தன் கருத்தினை மாற்றுவீரே.

வ-ம்:—நாதா! மருதப்பிரானின் மகத்துவத்தால் நமக்கிருக்கும் எண் ணிறந்தகோடி திரவியங்களுக் கிருப்பது ஈஸ்வரானுக்ரகத் தால் கிடைத்த ஓராண்குழந்தை எனபதுண்மை. உற்ற திரவி யதனதைக்கொண்டு இப்பிள்ளை பிழைத்தால் போதுமானது இதைவிடுத்து குழந்தை இவ்விளவயதில் நம்மைப் பிரிந்து கப்ப லேறிக் கடல் கடந்து வியாபாரம் செய்து லாபந்தேடி வர வேண்டிய பிரமேயமில்லை. அறியாப்பிள்ளைத் தனது சினேக ருடன் கூடித் தெரியாமற் பேசினுலும் தாங்களவனுக்கு நற் புத்தி புகட்டி நாடு கடவாமல் நிறுத்திவிடுங்கள் தங்கள் வார்த் தையை மீறி நடக்கமாட்டான்.

[மருதவாணர் விரைவுடன்வந்து திரு வெண்காடர் சிவகலையைப் பார்த்து]

## மருதவாணர் பாட்டு

(சொல்லும்வார்த்தையைக் கேளம்மா என்ற மெட்டு)

### பல்லவி

பாதம்பணிந்தேன் தந்தையே
தாயே யுனது (பா)

### அநுபல்லவி

ஆதரவானபோதம் அளிப்பீர்நல்லாசீர்வாதம்
பாதகமேயகற்றிப் பாதுகாப்பீரேநிதம் (பா)

தந்தைதாய்குருவன்றித் தான்வேறுதெய்வமுண்டோ
பந்தமகற்றியிந்தப் பாலனைகாக்குஞ்சொந்தப் (பா)

வ-ம்:—தந்தையே! தாயே தனயன் நமஸ்கரிக்கின்றேன்.

[வெண்காடரும் சிவகலையும் மருதவாணரை ஆசீர்வதித்து ஆசனத்தமரச் செய்ததும்]

திரு. வ-ம்:—குழந்தாய்! இத்தனைத் துரிதத்துடன் இங்கு வந்த காரணம் யாது?

மரு. வ-ம்:—அப்பா வேறு காரணமில்லை. வியாபார விஷயமாக நேற்றிரவு தங்களிடம் நான் சொல்லியதே முக்கியமான காரணமல்லவா?

திரு. வ-ம்:—வாஸ்தவந்தான்; அதைக்குறித்தே நானும் உனது தாயும் ஆலோசித்துக்கொண்டிருக்கின்றோம். உனது தாயார் சிவகலை உன்னை அயல்நாட்டிற் கனுப்பவேண்டாமென்று தர்க்கிக்கின்றாள். என் மனமும் உன்னைத் தனித்தனுப்பத் துணியவில்லை இதற்கென் செய்வது. தவிரவும்,

## திருவெண்காடர்—விருத்தம்

நம்மையாட் கொள்ளுமீச னவனருளி னாலே
செம்மைசேர் கனதனங்கள் செல்வநம் மகத்திருக்க
விம்மிய வறிஞர்போன்று வியாபாரஞ் செய்யவேண்டாம்
செம்மிய மருதவாணா சேதியா மிதைக்கேட்பாயே.

வ-ம்:—தனயா! எந்தவஸ்துவிற்குறைவு. எவ்வித தனத்திற்குறைவு வேறெப் பொருளிற் குறைவென்று நீ இப்பொழுது கடல் கடந்து கப்பலேறி வியாபாரஞ் செய்யவேண்டும். வேண்டாம் வீட்டிலிருந்தாற் போதும்.

சிவக. வ-ம்:—மைந்தா! 'தந்தைசொல்மிக்க மந்திரமில்லை' 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்பது நீ தெரிவாய். ஆதலின், உனக்குத் தந்தையுந் தாயுமாகிய நாங்கள் சொல்வதைத் தடுத்து எங்களைத் தனிவிடுத்து நீ எங்குஞ் செல்லவேண்டாம் இங்கு தானிரு.

மரு. வ-ம்:—தாயே தந்தையே! தாங்கள் சொல்வது சரியே, இருக்கினும், 'வைசியற்கழகு வளர்பொருளீட்டல்' என்னும் நமது குலாசாரத்திற் கேற்றபடி நானும் நமது செட்டிப்பிள்ளைகளுடன் சென்று வியாபாரஞ்செய்து, அதில் கிடைக்கக் கூடிய லாப நஷ்டங்களை அநுபவிக்க வேண்டாமா? வியாபாரஞ்செய்யத் தவறுவேனாகில் என்னைப்போன்ற ஏனைய வைசியகுலப் பிள்ளைகள் பரிகசிப்பார்களல்லவா. ஆகையால், 'திரைகடலோடியுந் திரவியந்தேடு' என்ற வாக்கியப்படி நான் சில காலம் கப்பல் வியாபாரம் செய்தே வருகிறேன். சஞ்சலமடையாது தாங்களிருவரும் தயவுடன் தகுந்தவிடை தரவேண்டும்.

சிவக. வ-ம்:—அப்பா மருதவாணு! இதென்ன பிடிவாதகமாகப் பேசுகின்றாய். குழந்தாய்! இவ்வெண்ணத்தை விடுத்து வீட்டிலிரு.

## பாட்டு தர்க்கம்

### (சுந்தரப்பியாரி என்ற மெட்டு)

கண்ணிகள்

மருத. வியாபாரஞ்செய்தேவந்து விசனத்தைத்தீர்ப்பேனின்று
வியாகூலமேனன்றன்று விடைதாரீர்வாரேன்சென்று (வி)

திரு. சின்னஞ்சிறுவயதி லுன்னைப்பிரிந்திருக்க
அன்னைதந்தையர்மன மெங்ஙனமாகும்நினைக்க (சி)

சிவக. செல்வமுனக்கில்லையோ சீருஞ்சிறப்பில்லையோ
கல்விப்பொருளில்லையோ கடல்கடக்கத்தொல்லையோ (செ)

மரு. வ-ம்:—தாயே! தந்தையே! தாங்களிவ்விதம் விசனப்பட்டு என் மனதைக் கலைப்பது நல்லதல்ல. எதற்கும் தாங்கள் அஞ்சவேண்டாம். எந்தவிதமாகத் தாங்களென்னைத் தடுத்தாலும் நான் நிற்கமாட்டேன். இவ்வித எண்ணம் எனக்குதித்தது நம் மருதவாணப் பெருந்தகையின் திருவருளாலென்று சந்தோஷமாக விடையளிக்க வேண்டுகிறேன்.

[திருவெண்காடர் யோசித்து சிவகலையைப் பார்த்து]

திரு. வ-ம்:—பெண்ணே! பிள்ளைப் பிடிவாதமாகப் பேசுகிறான். அவன் மனதைத் திருப்ப முடியாது. அன்றியும், நம்மூர்

வைசியகுலப் பிள்ளைகள் அனைவருஞ் செல்வதால் இவனும் அவர்களுடன் போய்வரும் வகையில் சந்தேகம் வேண்டிய தில்லை. சந்தோஷமாகவே அனுப்பி வைக்கலாம்.

சிவ. வ-ம்:—நாதா! தங்கள் அபிப்பிராயப்படியே தனையனை அனுப்பி வைக்கலாம் நான் சென்று பிரயாணத்திற்கு வேண்டியவைதைச் சித்தப்படுத்துகிறேன்.

[போகின்றனர்]

(சீன் முடிவு.)

---

## சீன்—11. இடம்:—கடற்கரை துறைமுகம்.

நடிகர்:—திருவெண்காடர், மருதவாணர், செட்டிப் பிள்ளைகள், சேந்தனார் முதலியோர்.

[இந்த சீனில் அவரவர்கள் தத்தம் பந்து மித்திருடன் வந்து பேசி, பெட்டிப் பேழை பல சாமான்களுடன் கப்பல் ஏறும் விமரிசையைக் கதானுசாரமாக நாடக நடிகர்கள் நடத்திக் கொள்வது நன்மை. மருதவாணர் செட்டிப்பிள்ளைக ளுடன் கப்பலேறிச் செல்கிறார். திரு வெண்காடர் சேந்தனாருடன் வந்து வழி யனுப்புகிறார்]

(சீன் முடிவு.)

---

## சீன்—12. இடம்:—சமுத்திரக்கரைக்கடுத்த ஓர்வீதி.

நடிகர்:—விஸ்வலிங்கஞ் செட்டி, ஏகாம்பரஞ் செட்டி, கபாலீஸ் வரன் செட்டி, மருதவாணர் முதலியோர்.

[விஸ்வலிங்கம், ஏகாம்பரம், கபா லீஸ்வரன் மூவரும் வெளிவந்து]

விஸ்வ. வ-ம்:—அண்ணே ஏகாம்பரஞ் செட்டியாரே! இதென்ன கொள்ளை. நம்முடன் வியாபாரத்திற்கு வந்த மருதவாணன் செட்டி செய்யும் அட்டூழியத்தைப் பார்த்தீரா.

ஏகாம. வ-ம்:—என்ன? என்ன விசேஷம்.

கபாலீ. வ-ம்:—என்ன விசேஷமா? வியாபாரத்திற்கென்று தான் கொண்டுவந்த பொருளை எல்லாம் செலவிட்டு இவ்வூரில் கோயில்

குளங் கட்டிக் கும்பாபிஷேகஞ்செய்து, பண்டாரம் பரதேசிகளுக்கு அன்னதானஞ்செய்து வருகின்றான். என்னையா ஒன்றுந் தெரியாதவர்போல் கேட்கின்றீர்.

விஸ்வ. வ-ம்:—நாமெல்லோரும் பல சரக்குகளையும் வாங்கி, பண்டமாற்றுப் பொருள்களையுஞ் சேகரித்து, நாளைய பிரயாணத்திற்குச் சித்தமா யிருக்கின்றோம்.

ஏகாம். வ-ம்:—இருக்கட்டும் இந்த மருதவாணன் செட்டிக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா; அல்லது சித்தப்பிரம்மையா என்னையா? என்னதான் பிரபுடீகாதிபதி பிள்ளையா யிருந்தாலும், ஊரிலுள்ள எருமுட்டைகளையும், அவல்கடலைகளையும், வாங்கி சரக்கு சரக்காக மூட்டை கட்டி ஏற்றுமதி செய்திருக்கிறானே இவனுக்கென்ன ஆணவமையா.

கபாலீ. வ-ம்:—ஆணவமாவது பைத்தியமாவது அவனுக்கிருக்கும் பணச்செருக்குதான் காரணம்.

விஸ்வ. வ-ம்:—எப்படியுந் தொலைந்து போகின்றான். நம்மைப் பின்பற்றி வந்ததற்கு அவனைக் கூட்டிப் போய் அக்கரை சேர்த்துவிடலாம். பின்னவனுண்டு; அவன் தகப்பனுருண்டு. நமக்கென்ன வந்தது.

[மருதவாணர் வருகிறார்]

ஏகாம். வ-ம்:—ஓஹோ! இதோ வந்து விட்டாரையா மருதவாணர்.

மருத. வ-ம்:—ஆம். என் வரவை எதிர்பார்த்து இது நேரம் தாங்கள் சம்பாஷித்த அனைத்தையும் அறிவேன். அன்பர்களே தாங்கள் என் பொருட்டும் என் வியாபாரத்தின் பொருட்டும், என் பொருட்டென் தந்தை தங்களை ஏசுவாரென்பதைக் குறித்தும் ஒரு சிறிதும்,

## விருத்தம்

சஞ்சல மடையவேண்டாம் சந்தோஷ மென்மேலுண்டு
விஞ்சையர் போற்றுமெந்தன் வியாபார விருத்தியுண்டு
செஞ்சொலா ரெனதுஸ்நேகசெட்டிமாரே நாமின்று
கஞ்சுகக் கப்பலேறிக் காவிரித்துறை செல்வோமே.

வ-ம்.—அன்பர்களே! என்னைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். உங்களது கைப்பொருள் மிகுதியாகும்படியான வியாபார வழியைக் கருதுங்கள். நான் கொள்முதற் செய்த வியாபாரமாகிய எருமுட்டை அவல்கடலை மூட்டைகளைக் குறித்து

நீங்கள் நெஞ்சயரவேண்டாம். என்னால் உங்களுக்கு எக்காலத்தும் விக்னம் நேராது. சந்தோஷமாகச் செலவோம் வாருங்கள்.

[எல்லோருங் கப்பலேறுகின்றனர்]

(சீன் முடிவு.)

---

சீன்—13. இடம்:—மருதவாணர் மந்திரம்.

நடிகர்:—திருவெண்காடர், சிவகலை, விஸ்வலிங்கஞ் செட்டி, காவலன்.

[திருவெண்காடர் சிவகலையுடன் அமர்ந்திருக்கும் சமயம்]

தர்க்கம் பாட்டு

(தணிகைமேவுங் கந்தசாமி என்ற மெட்டு)

பல்லவி

சிவகலை மருதவாணன் வரக் காணேன்—மகன்
மருதவாணன் வரக் காணேன்—என்
மன திலேதுந் தோணேன் நாயகா (மரு)

அநுபல்லவி

திரு விரதக் கப்பல் வியாபாரம்
வெகுநிதானமாய் சுகிர்தஞானமாய்
விநோதமாய் செய்தே வருவன் விரைவினில் (மரு)

சரணம்

சிவ காணவேமனங் கலங்கிவாடினேன்
காலமானதால் கவலையாகினேன்

திரு வேணபொருளுடனே வருவான்
விசனமேவிடு சுமனமேதொடு
வியாகூல மேனோ சிவகலையே (மரு)

சிவ. வ-ம்:—சென்று சில மாதமாகியும் இன்றுவரை நம்மைந்தன் மருதவாணன் வாரத காரணமென்ன அவன் வாராததை முன்னிட்டு என் மனம் மிக்க வருத்தமடைகிறது.

திரு. வ-ம்:—பெண்ணே! கப்பலேறிக் கடல்கடந்து சென்றவர்கள் வெகு நிதானமாகவும் சர்வ ஜாக்கிரதையாகவும் வியாபாரம் செய்து வருவார்கள். மருதூரின் மகாலிங்க மூர்த்தியின் திரு

வருளால் நமது மருதவாணனும் மனம் மகிழ்வாகவே வந்து சேருவான். அதைக்குறித்த வியசனம் உனக்கு வேண்டாம்.

[காவலன் ஓடிவந்து]

காவ. வ-ம்:—சுவாமி! நமது குழந்தையுடன் கப்பலேறி வியாபாரம் செய்யச்சென்ற விஸ்வலிங்கஞ்செட்டியார் தங்களுத்திரவிற்கு வெளியிற்காத்திருக்கின்றார்.

திரு. வ-ம்:—சீக்கிரஞ் சென்றழைத்து வா.

[காவலன் உட்சென்று விஸ்வலிங்கஞ் செட்டியை அழைத்து வருகிறான்.]

விஸ்வ. வ-ம்:—(திருவெண்காடரைப் பார்த்து) நமஸ்காரம், நமஸ் காரம்.

திரு. வ-ம்:—வரவேண்டும், வரவேண்டும். எப்போது வந்தீர்; எல்லோருஞ் சேர்ந்து வந்தீர்களா, தாம் தனியாய் வந்தீரா?

விஸ்வ. வ-ம்:—எல்லோரும் ஒன்றாகவே வந்தோம். தங்கள் குமாரர் மருதவாணருடைய வியாபாரத்தைப்பற்றிய இரண்டொரு விஷயங்களைத் தங்களுக்கு முன்னறிக்கை செய்து விட்டுப் போகவே இங்கு வந்தேன்.

சிவகலை. வ-ம்:—என் மைந்தன் மருதவாணர் க்ஷேமந்தானே.

விஸ்வ. வ-ம்:—எல்லோரும் க்ஷேமமே. துறைமுகத்திலிருந்து வந்து கொண்டிருக்கின்றனர். நான் முன்னாடி வந்தேன்.

திரு. வ-ம்:—நல்லது; மருதவாணனைப்பற்றி என்ன தெரிவிக்க வந்தீர்.

விஸ்வ. வ-ம்:—ஐயா; நாங்கள் அனைவருங் கப்பலேறிச்சென்று அக்கரையில் எங்கள் திறமைக்கேற்றபடி வியாபாரஞ்செய்து வேண்டிய பொருள் தேடினோம். எனினும், தங்கள் மகன் மருதவாணன் கொண்டுசென்ற பொருளனைத்தையும் கோயிலுக்குங் குளத்திற்கு மடத்திற்குமாகச் செலவுசெய்துவிட்டு அநாவஸ்யமான எருமுட்டைகளையும், அவல்கடலைகளையும் மூட்டை மூட்டையாக வாங்கி வந்திருக்கின்றான். இவ்விஷயத்தை யோசிக்க அவனுடைய மனோபாவம் மாறியிருக்கலாமென்று தங்களிடம் முன்னாடியே சொல்ல வந்தேன்.

திரு. வ-ம்:—(சிறிது மவுனமாக நின்று யோசித்து) அப்படியா நான் விசாரிக்கின்றேன். நீருமதில்லஞ் செல்லும்.

[விஸ்வலிங்கன் போக மருதவாண வருகிறார். திருவெண்காடரைப் பார்த்து]

## மருதவாணர் விருத்தம்

என்னருஞ் சிந்தைக்கேற்ற எழில்மிகுந் தந்தையேநின்
றன்னயத் திருவடிக்கு நாடியே சரணஞ்செய்தேன்
பன்னரும் பலவியாபாரம் பாலனான் செய்துவந்தேன்
தன்னரும் பிழைபொறுத்துத் தனையனை யாட்கொள்வீரே.

வ-ம்:—தந்தையே! தங்களாசீர்வாதப் பெருக்கால் கடல்கடந்து சென்று கனத்த வியாபாரஞ்செய்து வேண்டிய திரவியம் சம்பாதித்து ஓடோடியும் வந்தேன்.

[சிவகலையம்மன் முன்வந்து மருதவாணரைக் கட்டியணைத்து முத்திட்டு]

சிவகலை. வ-ம்:—குழந்தாய்! ஆசீர்வாதம். நீ உயிருடனுடன் சுகமாக வந்ததே எங்களுக்கு வேண்டிய திரவியம் சம்பாதித்து வந்ததுபோலானது.

திரு. வ-ம்:—குழந்தாய் மருதவாணா! நீ சென்ற இதுநாள்வரை அவ்வத்துறைமுகத்தில் என்னென்ன வியாபாரஞ் செய்துவந்தாய்; எத்தனை பவுன் லாபங்கொண்டு வந்தாய்.

மருத. வ-ம்:—பிதாவே! நான் கொண்டுவந்த வியாபாரப் பொருள்கள் துறைமுகத்திலிறங்குகின்றது. தாங்களே நேரில் சென்று பார்த்துக் கொள்ளலாம்.

திரு. வ-ம்:—நல்லது பெண்ணே நம் குழந்தை வீட்டிலிருந்து வெளியேறாதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். அடேகாவலா நீயுமிவனை கவனித்துக்கொள் நான் துறைமுகஞ் சென்று, மகன் கொண்டுவந்த வியாபாரப் பொருள்களைப் பார்வையிட்டு வருகிறேன்.

சிவ. வ-ம்:—சந்தோஷமாகச் சென்று வாருங்கள்.

[போகின்றனர்]

(சீன் முடிவு.)

———

சீன்—14. இடம்:—வியாபார விடுதி.

நடிகர்:—திருவெண்காடர், விஸ்வலிங்கம், ஏகாம்பரம், கபாலீஸ்வரன்.

[திருவெண் காடர், மருதவாணர் கொண்டுவந்த எருமுட்டைகளையும், அவல்கடலை மூட்டைகளையும், பரிசோதித்து எருமுட்டைகளில் மாணிக்கக் கற்களும், அவல் கடலைகள் பொன்மணலாக இருக்கும் உண்மை யறிந்துகொண்டு விஸ்வநாதனைப்பார்த்து]

திரு. வ-ம்:—விஸ்வநாதா, இவ்வோலை மருதவாணனுக்கு நீங்களனைவருஞ் சேர்ந்தெழுதிக் கொடுத்தது தானே.

விஸ்வ. வ-ம்:—ஆமாம். வாஸ்தவந்தான்.

திரு. வ-ம்:—அது உண்மையானால், இதோ இருக்கும் விராட்டிகளில் உள்ள மாணிக்கங்களைப்போல், மருதவாணனிடம் நீங்கள் பெற்ற விராட்டிகளு மிருக்கவேண்டுமல்லவா இதைப்போன்ற விராட்டிகளைக் கொடுக்க பதில் என்ன தெரிவிக்கின்றீர்கள்.

ஏகாம். வ-ம்:—பெரியாரே இந்த எருமுட்டையின் இரகசியம் தெரியாமல் மருதவாணனை பைத்தியக்காரனென்று நாங்கள் பரிகசித்தோம். தங்களிடமும் அவ்விதமே தெரிவித்தோம் இது போன்ற மாணிக்கமுள்ள விறட்டிகளை நாங்களெங்கிருந்து கொடுப்பது. இதனுடைய மகிமை அம் மருவாணருக்கே தெரியும்.

திரு. வ-ம்:—உமது வார்த்தையைக் கேட்டல்லவா, நானும் எனதருமைமகன் மருதவாணனை அவமதித்து அவனை வீட்டிலிருந்து வெளியேறுதபடி பார்த்துக்கொள்ளுங்களென்று ஆக்ஞாபித்து வந்தேன். இப்போதல்லவோ அவன் மகிமை எனக்கு விளங்கியது.

கபாலீ. வ-ம்:—எங்கள் குற்றத்தை மன்னிக்க வேண்டும்.

திரு. வ-ம்:—நல்லது; தாங்கள் அவரவரில்லஞ்சென்றுதத் தமது தாய்தந்தையைப் பாருங்கள். நான் சென்றெனது குழந்தை மருதவாணனைப்பார்த்து வருகிறேன்.

[போகின்றனர்]

(சீன் முடிவு.)

——

சீன்—15. இடம்:—மருதவாணர் மாளிகை.

நடிகர்:—திருவெண்காடர், சிவகலை, ஞான கைலாம்பிகை, சேந்தனார், காவலன்.

[திருவெண்காடர் விரைவுடன் வந்து மனைவி சிவகலையை நோக்கிப் பாடுதல்]

பாட்டு

(அவதாரபுருஷன் என்ற மெட்டு)

பல்லவி

மகனெங்கே சொல்லுவாய்
மதிவலையே சிவகலையே (மக)

அநுபல்லவி

இகபர சுகமது இருவர்க் களிக்குமக (னெங்)

சரணம்

அகமறிகிலன் நானே பித்தன்-அவனை
அலக்ஷியஞ் செய்தேன்மக மந்தன்-இந்த
மகிதனி லவனொரு முத்தன்-என்று
மதிக்கும் புலவ ரெல்லாந்
துதிக்கு மருமை மக (னெங்)

வ-ம்:—பெண்ணே சிவகலா! நம்குலப் பிள்ளைகளின் வார்த்தையைக் கேட்டு நானு மதிமோசம் போனேன். எங்கே நமது மகன். எங்கே நம்மை யீடேற்ற வந்த மருதவாணன். மத்தியார்ச்சுனப் பெருமான் திருவருளால் பெறாது பெற்றெடுத்த நமது மருதவாணப் பெருந்தகையார் செய்துவந்த வியாபாரப் பெருக்கை என்னென்று சொல்லுவேன். அவன் கொண்டு வந்த எருமுட்டைகளில் ரத்தின மணிக ளிருக்கின்றன. அவல் கடலை மூட்டைகளத்தனையும் பொன்மணற் குவியலாய்க் காணுகின்றன. இத்தகைய பெருமிதமான வியாபாரஞ் செய்துவந்தப் பிள்ளையின் மனமறியாது பித்தம் பிடித்தவனென்றெண்ணிக் காவலிட்டுச் சென்றேனே. ஐயோ நானன்றோ பித்தன்; உன்மத்தன். நாயகி! எங்கே குழந்தை.

[அரண்மனையைச் சுற்றி ஓடிப்பார்த் தலைந்து காணாது]

திரு. வ-ம்:—அடே காவலா.

[காவலன் ஓடிவந்து நிற்க அவனைப் பார்த்து]

திரு. வ-ம்:—காவலா! எங்கே நமது மருவ்வாணப் பெருந்தகையன். எங்கே என்னருமை மைந்தன். எங்கே என்னருங் குழந்தை.

காவ. வ-ம்:—(பயந்து) சுவாமி! தங்கள் வாக்கியப்படி அவர் வீட்டை விட்டு வெளியேறாத வண்ணம் வெகு ஜாக்கிரதையாகக் காவற் புரிந்திருந்தேன். உண்மையில் அரண்மனையினின்றும் அவர் வெளியேறவில்லை.

சிவகலை. வ-ம்:—நாதா! இதென்ன பிரேமை, ஏனிச்சஞ்சலம். குழந்தை இங்குதான் இருக்கிறான். சற்றுமுன் சாதம் புசித்து (எடுத்துக்காட்டி) இதோ இச்சிறு பெட்டியைத் தங்களிடங் கொடுக்கும்படித் தெரிவித்து வெளியே போனான். எங்கும் போகான். துறைமுகம் சென்று வர்த்தக விசேஷங்களைக் கவனித்து வருவான் பொறுமையா யிருங்கள்.

[சிவகலையம்மன் பெட்டியைக் கொடுக்க வாங்கிப் பார்த்த திருவெண்காடர், சிறிதுஸ்தம்பித்து நின்று, மேலணிந்திருந்த ஆடையாபரணாதிகளைக் கழட்டி எறிந்துவிட்டு, பெட்டிக்குள்ளிருந்த, காதற்ற ஊசி ஏட்டைக் கையிலெடுத்துக்கொண்டு, அதனுள்ளிருந்த சீட்டோலைத் துண்டை வாசித்துப் பார்த்து]

## திருவெண்காடர் கலித்துறை

பட்டைக் கிழித்துப் பருவூசி தன்னைப் பரிந்தெடுத்து
முட்டச் சுருட்டிஎன் மொய்குழ லாற்கையின் முன்னெடுத்து
கட்டியிருந்த கனமாயக் காரிதன் காம மெல்லாம்
விட்டுப் பிரியவென் றோவிங்க னேசிவன் விண்டதுவே. 1
சூதுற்ற கொங்கையு மானார் கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்ற பூசலுக் கென்செய லாஞ்செய்த புண்ணியத்தால்
தீதற்ற மன்னவன் சிந்தையில் நின்று தெளிவதற்கோ
காதற்ற ஊசியைத் தந்துவிட் டானென்றன் கைதனிலே. 2
வேதத்தி னுட்பொருள் மண்ணாசை மங்கையை விட்டுவிட
போதித் தவன்மொழி கேட்டிலே யோசெய்த புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன்போலே வெளிச்சம தாம்பொழுது
காதற்ற ஊசியும்வாரா துகாணுங் கடைவழிக்கே. 3

[மவுனமாகநிற்கின்றார். ஞானகலாம்பிகை, சேந்தனார், காவலன் மூவரும் வந்து வெண்காடரைக்கண்டு வியப்புற்று நிற்கின்றனர்]

சிவகலை. வ-ம்:—நாதா! நாதா! நாதா! இதென்ன மௌனம்; இதென்ன சோகம்; இதென்ன விவரீதம்; இதென்ன வேஷம்; ஏன் இந்த துவேஷம்; ஐயோ! மைந்தனாய் வந்த மருதவாணன் நமக்கு மந்தனானானே. வேறெதற்காக இக்கவலை; விஷயமின்னதென விளங்கவில்லையே.

[சிவகலை அழுகின்றாள்]

திரு. வ-ம்:—ஏனழுகின்றனை; என்னைப் பார்த்தழ இனி எனக்கு நீ யார். நானுனக்கார். அழாதே அப்புறம் விலகு; எட்டி நில்; என் விரதத்தை வீணாக்காதே; விவரமறியாது புலம்பாதே.

சிவ. வ-ம்:—நாதா! நான் தங்கள் மனைவி சிவகலையல்லவா?

திரு. வ-ம்:—சிவகலை உன்பெயர்; சாலச்சிறந்தது. நீ என் மனைவி என்பது ஏற்காத வார்த்தை; உலக வழக்கிற்கு என் மனைவியாயினும் நான் தெரிவிப்பதைக்கேட்டு சிந்தாகுலந்தீர்ந்து அப்புறஞ் செல். அதாவது,

## விருத்தம்

மனையாளு மக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாயில்மட்டே
இனமான சுற்றமயானமட் டேவழிக் கேதுதுணை
தினையாமளவெள்ளளவா கினுமுன்பு செய்ததவம்
தனையாறவென்றும் பரலோகஞ் சித்திக்குஞ்சத்தியமே.

வ-ம்:—சிவகலா! மேற்சொன்னதைக் கவனித்தனையா. விவரமாகத் தெரிவிக்கின்றேன். இன்னமுங்கேள்; அதாவது, இன்றே என் ஜென்ம சாபல்யமானது. இன்றே நான் புனிதனானேன். இவ்வளவிற்குங் காரணம் என்னையாட்கொள்ள வந்து மகனாக என்னில்லத்திருந்தது அம்மருதீசனேயன்றி வேறில்லை. அந்தோ! சபலச்சித்தனான நான் அவனை பகவானென்று நினையாது, மதிமோசம் போனேனே.

ஆ! ஹா! சிலநாள் முன்பு நம் வைசிய குலப்பிள்ளைகளோடு விளையாடுதற்பொருட்டுக் கடற்கரை சென்று ஓடமேறிச் செல்லுஞ் சமயம், உடனிருந்த வைசியப்பிள்ளை யொருவனை ஓர் பெரிய மீனானது விழுங்கிவிட, உடனே நம்மருதவாணப்பெருமானும் மீனைத் தன் திருவடியாலுதைத்துக் கொன்று, மீன் விழுங்கிய பிள்ளையை மீட்டும் அதன் வயிற்றிலிருந்த நவரத்தினக்

கற்களை வாரிக்கொண்டு வந்தவர்கள், உயிர்துறந்த அம்மீன் மணிக்கிரீவன் என்னும் கந்தர்வ புருஷனாகத்தோன்றி மறைந் தான் என்பதைக் கேட்டும் என்மனந் தெளிந்தறியாது ஏமாற லானேனே.

அன்றியும்; சென்ற சிலநாள் முன் சகலருடன் கூடி ஜாதியாசாரப்படி வியாபாரத்திற்காகச்சென்ற சமயம் தான் தங்கியிருந்த தீவில் மருதவாணவள்ளல் சம்பாதித்த பொருளனைத்தையும், கோயில், மண்டபம், மடம், சத்திரம், சாலை, சோலை, குளம், கூவம், தடாகம், முதலியவற்றை ஜீவகாருண்ய முதிர்ச்சியினால் செய்து வைத்தா னென்பதைக் கேட்டும் உண்மையுணராமற்போ னேனே அன்றியும்,

## விருத்தம்

உடைகோவண முண்டு வுறங்கப்புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம முண்டிந்த மேதினியில் [கே.
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்

என்பதுபோல் நித்தியானந்தத் திருப்பதை விடுத்து, நிலையாத சமுத்திரமான சமுசாரத்துரைக்கண் மூழ்கி அறிவழிந்து கிடந்த என்னை புனிதனாக்கவேண்டும் என்று நினைத்தோ, என் னிடங் கொடாமல் உன்வசமாக இந்த காதற்ற ஊசியும், பிரிந்து முறுக்கேறாத நூலையுந் தந்து சென்றான். இதிலிருந்து சகல விவரத்தையுஞ் சாலத் தெரிந்தேன். இனி இந்த உலக வாழ்வி லீடுபட என்க்கு மனமில்லை.

## சிவகலை விருத்தம்

மனமில்லை என்றுசொல்லி மன்னநீ ரெனைப்பிரிந்தால்
எனதொரு கதிஎன்னாகும் இதுமன மறிந்திடாதோ
தனதொரு துணையேயன்றி சார்துணை வேறுமுண்டோ
தினமிதி லெனைவிட்டேநீர் செல்லுதல் சீரதாமோ.

வ-ம்:—நாயகா! என்ன விபரீதமிது. தங்கள் வார்த்தையைக் கேட்க வும் என் மனம் பதறுகிறதே. நம் குழந்தை எதுவோ ஒரு பெட்டியை என்னிடங் கொடுத்தான். அதிலிருந்த காதற்ற ஊசியையும், சரடையும், ஓலை நறுக்கையும் கண்டு தங்களது இராஜகோலத்தை மாற்றி, பரதேசிகோலம் பூண்பது நன் றுமா? காதலா! எது எப்படியாயினும், ‘இல்லற மல்லது நல்லற மன்’ றென வுரைத்த முதியோர் வார்த்தையை தாமறியீரா? குழந்தை கோறெங்கும் போயிருக்கான்; விரைவில் வந்துவிடு வான். சிறிது பொறுங்கள்.

திரு. வ-ம்:—பொறுப்பதாவது, வெறுப்பதே சரி. மகன் வருவதாவது. அவனைத்தேடிச் சுகம் பெறுவதே சரி.

## விருத்தம்

அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி யம்புருக
எத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந்த ருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே.

என்றபடி இனி இவ்விலறப்பற்று எனக்கு வேண்டாம். நல்ல புத்தி புகட்டிப் போனான் என்னப்பன் மருதீசன் உன் சொற்படி அவனிங்கு வரினும் மகனுடனிருந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருப்பாய்.

## பாட்டு தர்க்கம்

(வெற்றிலையைத்தந்துவிட்டு என்ற மெட்டு)

கண்ணிகள்

சிவக. என்னைத்தனிவிடுத்து யேகுதல்நலமாமோ மன்னா
திரு. என்னாற்பிரயோசனம் இங்குனக்கேதுசொல்வாய் பெண்ணே
சிவக. ஏதற்றவளானாலும் நாதனைப்பிரிவாளோ மன்னா
திரு. காதற்றவூசியும் வாராதுகடைவழிக்கே பெண்ணே [மன்னா
சிவக. கடைத்தேறும்பெண்களுக்குக் கணவனேதெய்வமல்லோ
திரு. விடையேறுமீசனை வேண்டிப்பணிந்திருப்பாய் பெண்ணே

சிவக. வ-ம்:—நாதா! எவ்விஷயத்திலும் நாயகன் நாயகியை அநுசரித்தே செய்யவேண்டுமென்பது சுருதி சம்மதம் இதைத் தாங்கள் தெரியாதவரல்ல. ஆகவே, தங்களது இல்லறத்திற்கு வேண்டிய துணைக்கருவியாய் இதுநாள்வரை நானிருந்தபடி, இனிமேல் தாங்கள் கைக்கொண்ட துறவறத்திற்கோர் தூண்டுகோலாக என்னை உடனழைத்தேகுவதே உசிதம். 'துணையோடல்லது நெடுவழி போகே'லென்னு மூதுரையைத் தாங்கள் கவனிக்கவேண்டும்.

## திருவெண்காடர் விருத்தம்

எரியெனக் கென்னும் புழுவோ எனக்கென்னு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கென்னுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் நாயெனக் கென்னுமிந் நாற்றுடலை
பிரியமு டன்வளர்த் தேனித னாலென்ன பேறெனக்கே.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்றும கிழ்வ தெல்லாங்
கேடுண் டெனும்படிக் கேட்டுவிட் டோமினிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே எழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே.

வ-ம்:—என்பதுபோல் அவரவர் வினையில் அவரவர் வருவார், அவரவர் வினையளவுக்கே அவரவர் போகம் என்பதேயாயின் ஆருக்கார் துணையதாகுவார்கள். அவரவர் தேகம் உளபொழுதுடனே ஆதரவாறெனநாடி, அவரவரடைதல் நெறிகன்மத்தடையுமாதரவாதரவாமால் என்பதை நினையாது நானுன்னைக் காப்பாற்றக்கூடிய கணவனென்றும் நீ என்னை யாதரிக்கக்கூடிய மனைவி என்றும் மதித்து என் பின்பற்றிவர எத்தனிக்கின்றாய். வேண்டாம் நீ யார்! நானார்! நமது திரண்ட சம்பத்தெல்லாம் எது இது எவரால் உமக்களிக்கப்பட்டது. இனி விவரித்துப்பேச நேரமில்லை. பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை நீ யாகில் என் வார்த்தையைத் தட்டாதே. நமக்கும் மருதீசன் அநுக்ரகமுண்டு. என்போல் நீயும் சுகம்பெறுவாய். நான் சென்றுவருகிறேன். இங்கு நில் இனி என்னைப் பின் தொடராதே.

[சிவகலையம்மன் அழுத வண்ணம் நிற்க ஞான்கலாம்பிகை முன் வந்து]

## ஞானகலாம்பிகை பாட்டு

(எத்தனைநாள் பட்டினியாய் என்ற மெட்டு)

பல்லவி

சொல்லறமா மில்லறத்தின் நல்லறந் தனைவிடுத்துத்
துறவறம் பூண்ப தழகோ (சொல்)

அநுபல்லவி

பல்லறஞ் செயற்குகந்த பாக்கிய சம்பத்திருக்க
தொல்லறப் பெரியார்போன்று தோணுமோ வழிநடக்க (செ)

சரணம்

தந்தைக்குப்பின் தாய்க்காதாரந்
தனையனென்று மோர்சாரந்
தனைத் தெரியாது விசாரம்
சிந்தையில் மிகவுங்கொண்டு
செல்வங்கள் யாவுந்துறந்து
எந்தனை இன்றேபிரிந்து
ஏகுத லேன்மனம் நொந்து (சொல்)

விருத்தாப்பி யத்தால்நானே
மெலிந்து தவிக்கின்றேனே
வெறுப்பதேனென்னை மகனே
ஒருத்ததா ருன்னையிங்கே
வுனைவிட்டா விடமெங்கே
கருத்தையறிந்தே என்னை
காப்பாற்றுவாயே முன்னை (சொல்)

வ-ம்:—அப்பா! பத்துமாதஞ் சுமந்து பெற்றுவளர்த்த என்னை, இவ் வயோதிக திசையில் கைவிட்டுச் செல்வையாகில், எனக்கு நடத்தும் இறுதிக் கடன்கள் செய்பவல்லார் யார்? கண்ணே! என்னருமை மகனே! உன் பிதாவிற்கு நீ யியற்றிய கருமக்கிரி யைகளை எனக்கும் இயற்றிச் செல்வாயாக.

திரு. வ-ம்:—அம்மா; இதென்ன பேதமை தங்களை நரை திரைமூப்பு மூடிக்கொண்டது. காடுவா வென்கிறது. வீடுபோ வென்கிறது. இது சமயத்திலும் தங்களுக்குப் பிள்ளைபோன், மருகி; மருகன், மனை, பந்து, மற்ற மண்ணெனான் என்னுமாசை எதற்கு தாயே, என்னால் தங்களுக்கு என்ன செய்யக்கூடும். விசன மின்றி நான் சொல்வதைக் கவனியுங்கள்.

## தாண்டகம் பாட்டு

தந்தையர் போயினர் தாயரும்
போயின ரினித் தாமும் போவார்
கொந்தைவேல் கொண்டொரு கூற்றத்தா
நிற்கின்று னெனைக் கொண்டுபோக
எந்தநாள் வாழ்வதற்கோ
யிச்சை வைத்துநான்
அந்தணு ரூர்தொழுது வுய்யலா
மையல்கொண் டஞ்சல் நெஞ்சே

வ-ம்:—என்பதுபோல், எல்லாந் தெரிந்த உங்களுக்கு விசேஷம் யான் என்ன சொல்லப் போகின்றேன். தேவரீரது ஈமக்கடன் முதலியதை நானே இயற்றுவேன். சதா பரமேஸ்வரனது திருவடியைத் தியானித்திருங்கள். எனக்கு மகனாகவும் தமக்குப் பேரனாகவும் நம்மனையில் வளர்ந்த மருதவாணனும் எனது குருமூர்த்தியின் உபதேசப்படி நான் இவ்வில்லறத்தை வெறுத்துச் செல்கிறேன். இது முதல் என் தாயாகிய தாங்களும் நன்முத்திப் பெறுவீர்கள்.

[ஞானகலாம்பிகை அழுதவண்ணம் விலகிநிற்க, சேந்தனார் வந்து திருவெண்காடரைப் பணிந்து நிற்கின்றார்]

திரு. வ-ம்:—கஜானு அதிகாரத்வம் பெற்ற சேந்தனுரே இதோ எனது திரவியப் பொக்கிஷத் திறவுகோலைப் பெற்றுக் கொள்ளும். (திறவுகோலைக் கையிற் கொடுத்து) பெட்டகத்திலுள்ள சகல தனங்களேயும் எடுத்துத் தானதருமம் செய்துவிடும். நான் சென்று வருகிறேன்.

[போகின்ருர். காவலன் குறுக்கிட்டு வணங்கி நிற்க]

திரு. வ-ப்:—காவலா உனக்கு வேண்டிய திரவியத்தைச் சேந்தனுரிடம் பெற்று சுகஜீவியாக வாழ்ந்திரு; இன்னுஞ் சின்னுள் இவ்வூரிலிருந்து குடியிருந்த வீட்டிற் கொள்ளிவைத்துப் போவேன்.

[போகிருர்]

(சீன் முடிவு.)

---

## சீன்—16. இடம்—திருவெண்காடர் சகோதரி மீனுக்ஷிவீடு.

நடிகர்:—திருவெண்காடர், மீனுட்சியம்மாள்.

[மீனுக்ஷியம்மாள் வெளிவந்து]

மீனு. வ-ம்:—ஆஹா! இதென்ன பேராச்சரியம். என் தந்தை சிவநேசர் வாழ்ந்த வாழ்வென்ன; என் சகோதரன் திருவெண்காடன் இருந்த இருப்பென்ன; அவனது வியாபார விசேஷமென்ன; காவிரிப்பூம் பட்டினத்துற்ற தனவைசியர்களுக்கெல்லாம் தலைமை ஸ்தானம் பெற்ற என் சகோதரன் வரன்முறை மாறி இடுவார் பிச்சை யேற்றுண்டுத் திரிவதால் என் குலத்திற்கன்றோ இழிவாயிருக்கின்றது.

என் தாயாரும் இது விஷயமான மனக்கவலையை மேற்கொண்டு, இன்றோ, நாளையோ, இப்பவோ, பின்னையோ இறந்துவிடும் அந்தஸ்தி லிருக்கின்ருள்; காவிரிப்பூம் பட்டினத்திலும் திருவெண்காட்டிலும் உற்ற பந்துக்களுட னில்லாது ஏனைய குடிமகா ஜனங்களும், எனது குடும்பத்தைப் பரிசிக்கின்றனர் இவ்வளவிற்குங் காரணமாகிய இப்படுபாவி என் தமையன் இறப்பானுகில் என் தந்தை பேர் பிரகாசிக்கும்.

ஆம், இதற்கெப்படி யோசனை. (ஆலோசித்து) அவனோ ஐயமெடுத்துண்பவன். அவன் வருஞ் சமயம் அன்புடனழைத்து அப்பத்தில் விஷங் கலந்து கொடுப்போமாகில் தின்று இறந்துவிடுவான். (எதிர்பார்த்து) நல்லகாலம் நம் யோசனைக் கேற்றபடி அவனும் அதோ வருகின்ருன். அவன் வருமுன் அப்பம் தயாரித்து வரலாம்

[உள்ளே போகிருள். திருவெண்காடர் வந்து]

திரு. வ-ம்:—அக்கா, சகோதரன் வந்திருக்கிறேன்.

[மீனாட்சி வெளிவந்து]

மீனா. வ-ம்:—சகோதரா இப்படி உட்கார்; இவ்விதம் உனது மதி மாறி நம் குடும்பப் பெயரைக் கெடுக்கலாமா?

திரு. வ-ம்:—அதிருக்கட்டும்; பசிக்கு ஏதாவது பக்ஷணம் கிடைக்குமா?

[மீனாட்சி உட்சென்று அப்பங்கொண்டு வந்து]

மீனா. வ-ம்:—இதோ; இந்த அப்பத்தைச் சாப்பிடு.

[திருவெண்காடர் அப்பத்தை வாங்கிப்பார்த்து]

## திருவெண்காடர் கவி

தன்வினை தன்னைச் சுடும்
ஓட்டப்பன் வீட்டைச் சுடும்

[அப்பத்தை வீட்டின் கூறையில் சொருகிச் செல்கிறார்; வீடு தீப்பற்றி எரிகிறது; மீனாட்சித் தனது பந்துமித்திரருடன் பாதவித்தல்.]

## திருவெண்காடர் பாட்டு

(பாலனான் பரதேசி என்ற மெட்டு)

கண்ணிகள்

தன்வினை தன்னையே சுடும் அப
சார நெஞ்சக முஞ்சுடும்
உன்வினை யுன்னையே சுடுமிந்த
வோட்டப்பம் வீட்டைச் சுடும் (தன்)

தமக்கையார் தந்த அப்பமே பசி
தணிக்குமோ விஷ வெப்பமே
நமக்குமேலொரு மருதவாணரின்
ஞாயமே நற்ச காயமே (தன்)

குடியிருந்ததோர் வீட்டிலே இனிக்
கொள்ளியே வைப்பே னள்ளியே

அடிசுமந்திடு மன்னையே உனக்
காணதே வுண்மை தானிதே (தன்)
[போகின்றார்]

(சீன் முடிவு.)

---

சீன்—17. இடம்:—மயானம்.

நடிகர்:—திருவெண்காடர், மற்ற பந்துவர்க்கக் கோஷ்டியினர்.

[ஞானகலாம்பிகைப் பிரேதத்தை சுற்றத்தாரெடுத்து வரக்கண்ட திருவெண்காடர், அவர்களைக் கற்களாலெரிய பிரேதத்தைச் சுடலையில் வைத்துவிட்டு மற்றவர்கள் விலகி நிற்கின்றனர். திருவெண்காடர் பிரேதத்தருகிற் சென்று]

பாட்டு

(அம்மா அதிசயமே என்ற மெட்டு)

பல்லவி

தாயே மடிந்தனையோ
எந்தனைப் பெற்றத் (தா)

அநுபல்லவி

சேயனெனைப்பிரிந்து தேசந்தனை மறந்து
மாயவுலகைத்துறந்து எந்தனைப்பெற்றத் (தா)

சரணம்

மானிடதேகமிதே மாயமாகுமென்பதே
தானதுவுண்மையானதே எந்தனைப்பெற்றத் (தா)

வெண்பா

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி.

[காஷ்டத்திற் பிரேதத்தை எடுத்து வைத்து வாழை மட்டைகளை விறகாக அடுக்கி எதிர் நின்று புலம்புதல்]

### வெண்பா

முந்தித் தவங்கிடந்து முந்நூறுநாட் சுமந்து
அந்திப்பக வாய்ச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்றத் தாயார் தனக்கோ
எரியத் தணல்மூட்டு வேன்.

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறிகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்தனக்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

நொந்துசு மந்துபெற்று நோகாம லேந்திமுலை
தந்துவ ளர்த்தெடுத்துத் தாழாமே—அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

[இது சமயம் அநாதைகளான அன்னிய ஸ்திரீகள் நால்வர்வந்து பிரேதத்தைச் சுற்றிநின்று மாரடித்தழுகின்றனர்.]

[இவ்விடம் நடிகர் சமயோசிதம்போல் ஒப்பாரிப் பாடிக்கொள்ளவும்]

திரு. வ-ம்:—அம்மையரே, தாங்கள் யார்? இப் பிரேதத்தை சுற்றி மாரடித்தழுங் காரணமென்ன.

அந்நிய. வ-ம்:—ஐயா! நாங்கள் இவ்வூரில் வசிப்பவர்கள் இவ்வம்மை யாருடன் நன்கு பழகி வளர்ந்தவர்கள் இவர்கள் இறந்த விஷயங் கேட்டிங் குவந்து எங்கள் துயரையாற்றிக் கொள்கிறோம்.

திரு. வ-ம்:—அப்படியா! நீங்கள் மாரடித்தழுத கூலியை மடிமேற் பெற்றுச் செல்லுங்கள்.

[பெண்கள் மடியேந்த வெண்காடர் மணலை வாரிக்கொட்ட அவல் கடலையாதல் பெண்கள் செல்கின்றனர். அடியார் அம்மையின் பிரேதத்திற்குவாய்க்கரிசியிடுகிறார்]

### வெண்பா

அரிசியோ நானிடுவே னாத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாம—லுருசியுற்ற
தேனே யமுதமே செல்வத் திரவியச்சீ
மானே எனவழைத்த வாய்க்கு.

அள்ளியிடுவ தரிசியோ தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனே கூசாமல்—மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி எந்தன்
மகனே எனவழைத்த வாய்க்கு.

[பிரேதத்தில் விறகுக்குப் பதிலாக
வைத்த பச்சைவாழை மடல் எரி
யப் பாடுதல்]

## விருத்தம்

முன்னை யிட்டதீ முப்பு றத்தினில்
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவ யிற்றினில்
யானு மிட்டதீ மூள்க மூள்கவே.

[பிரேத மெரிகிறது சிறிது மவுன
மாக நின்று]

## வெண்பா

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ—சந்ததமு
முன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
தன்னையே யீன்றெடுத்த தாய்.

வீற்றிருந்தா ளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள்—பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காம
லெல்லாஞ் சிவமயமே யாம்.

[தாயாரின் காஷ்டத்தை மும்முறை
வலம்வந்து பணிந்தெழுந்து சிர
மேற் கைகூப்பிச் செல்கின்றார்.]

(சீன் முடிவு.)

---

சீன்—18. இடம்—திருவாரூர்.

நடிகர்:—திருவெண்காடர், தியாகராயன்,
சிவக்யானம்பிள்ளை, தேவாம்பிகை.

[திருவெண்காடருக்குத் திருத்தொண்டு
செய்துவந்த சிறுவன் தியாகராயனென்
பவன் ஜன்னிநோயால் மரணமடைந்த

தும், அவனது தந்தை சிவக்யானம் பிள்ளையும், தாயார் தேவாம்பிகையும், மற்ற சுற்றத்தாரும் துக்கித்துக்கொண்டிருக்கும் சமயம் திருவெண்காடர் அங்குசென்றவர்கள் சோகத்தைக் கண்டு மனஞ்சகியாது]

## திருவெண்காடர் விருத்தம்

மண்ணுமுருகு மரமுருகு மாயையுருகு மாலுருகும்
பெண்ணுமுருகு மாணுருகும் பேதாபேத வகையுருகும்
அண்ணலுருகு மிடத்தமர்ந்த வாத்தாளுருகு மரவணையான்
எண்ணியுருகுங் குருநாத னென்பாலுரைத்த ஓர்மொழியே.

[இப்பாடல் பாடி முடிய இறந்தவன் உயிர் பெற்றெழுந்து வணங்க ஆசீர்வதித்துத் திருவெண்காடர் செல்கிறார்.]

(சீன் முடிவு.)

---

சீன்—19. இடம்—கொங்குநாடு.

நடிகர்:—திருவேண்காடர், குடியானவர்கள்.

[திருவெண்காடர் வயிற்றுப் பசியின் பொருட்டு ஓர்வீட்டின் வாயிலில் நின்று கைதட்ட இவரைக் கள்வரென்றெண்ணியடித்தல்.]

## திருவெண்காடர் விருத்தம்

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே.

## வெண்பா

ஒருநா ளுணவை வொழியென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றா யேலாய்—ஒருநாளும்
என்னோ யறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

[இப்பாடலைக் கேட்ட குடிஜனங்கள் அடியாரை உபசரித் தனுப்புகின்றனர்.]

[இந்த சீனில் நடிகர்கள் சமயோசிதப்படி பேசி நடிக்கலாம்.]

## திருவெண்காடர் பாட்டு

(கதனுகுதுஹ கலராகப்ரியா என்ற மெட்டு)

பல்லவி

நமப்பார்வதி பதிசேவிதம் 49
நாமநாம சங் கீதார்ச்சிதம் (நம)

அநுபல்லவி

அமராபதி துதி தேவாதி
அம்பிகா ப்ரசன்ன சம்ப்ரமச்சுகாதி (நம

சரணம்

சந்த்ர சேகரனே வந்தருளெங் கோனே
உந்தன்பாதந் தானே மைந்தன் நம்பினேனே
செந்தமிழ்ச் சுகா னந்த நாயகா
சிந்தைசெய் சங்கா லிங்க தாயகா

சேகரமான க்ருபாகரனே பரி
பூரணனே யிம கிரிவளர ராஹர
தெரிசன ஜனமன மதுவளர் சிவசிவ
அயனரி யடிமுடி யறிகிலா பொருள் (நம)

(சீன் முடிவு.)

---

சீன்—19. இடம்—திருவஞ்சைக்களம் சிவாலயம்.

நடிகர்:—திருவெண்காடர், ஸ்ரீ பார்வதிதேவியார்.

[திருவெண்காடர் பசியால் வருந்தி சிவாலயத் தமர்ந்து]

வெண்பா

இருக்கு மிடந்தேடி என்பசிக்கே யன்னம்
வருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என் தேகம்
இளைத்தாலும் போகே னினி.

[இப்பாடல் முடிந்ததும் பார்வதி யம்மன் ஓர் பணிப்பெண் வேடத் துடன் வந்து அமுதேந்திய தட்டு டன் வந்து]

பார்வதி வ-ம்:— ஆ! ஹா! நமது பக்தனுடைய மனப்பான்மையே பான்மை, என்ன வைராக்கியம், தானிருக்கக்கூடிய இடத்திற்கு அன்னம் வந்தால் புசிப்பேன் என்ற இல்லறத்துறவியை நான்

இதுவரை கண்டதில்லே. தற்சமயம் அடியார்க்கிரங்கும், அகிலாண்டேஸ்வரியாகிய நான் அவனுக்கமுது படைக்க அன்னங் கொண்டுவந்திருக்கிறேன். படைத்துச் செல்வோம்.

(சீன் முடிவு.)

---

சீன்—20. இடம்—உஞ்சேணமாகாளம் ஓர் வீதி.

நடிகர்:—குட்டி, ஜட்டி, எட்டி, பட்டி.

குட்டி:—அடேபையா! ஜிட்டி, என்னுயிது யெம்மவனே, இண்ணிக்கி எங்கடா போயி கன்னம் வைக்கலாம்.

ஜிட்டி:—அண்ணே! நம்பமவராஜா ஊட்ளே பூந்தாதாண்டா நம்ப கருப்புத்தொலயும்.

எட்டி:—அடே! பசங்களா எந்த வூட்டுக்குப் போறதா யிருந்தாலும் நம்ப புள்ளேயார் சாமியே கொஞ்சம் வேண்டிக்னு போங்கடா.

பட்டி:—ஆமாண்டா! அதுவும் நெசந்தாண்டா, இண்ணிக்கி நம்ப வேட்டே பலிச்சா புள்ளேயாரப்பாவுக்கு கொஞ்சம் மர்யாதே பண்ணனுண்டா.

## எல்லோரும் பாடுதல் பாட்டு

(மாறுமதுரையிலே என்ற மெட்டு)

கண்ணிகள்

அப்பா அப்பா தொப்பை — யப்பா—நல்ல
ஆனேமுக மான — அப்பா
சுப்பா சுப்பா தொந்தி — யப்பா—எங்கள்
தோத்திரத்தைக் கேளு — மப்பா. (அப்)

தெற்குமுகத் — தந்தியப்பா—யாருந்
தேடித் தொழுந் தொந்தி — யப்பா
எற்குதவி செய்வா — யப்பா—நாங்கள்
இராஜா விடு போரோ — மப்பா. (அப்)

சுண்டல் கொழுக்கட்டை — யப்பா—படித்
துறையில் வாழுங்குட்டி — யப்பா
கிண்டல் எம்மைசெய்யா — தப்பா—நல்ல
கீர்த்திதரும் பிள்ளேயா — ரப்பா (அப்)

[எல்லோரும் பாடிக்கொண்டு போகின்றனர்]

[இந்த சீனிலும் நடிகர்கள் நாடகாசாரப் படி காலங்கடக்காது சமயோசிதமாக நடிக்கலாம்]

(சீன் முடிவு.)

---

## சீன்—21. இடம்—பிள்ளையார்கோயில்.

நடிகர்:—திருவேண்காடர், குட்டி, ஜட்டி, எட்டி, காவலர், மந்திரி முதலியோர்.

[திருவெண்காடர் விநாயகாலயத்தில் நிஷ்டையிலிருத்தல். பத்ரகிரியார் அரசன் வீட்டில் களவுசெய்து வெளிவந்து ஓர் முத்தாரத்தை விநாயகர் கழுத்தில் போட்டுக் கள்வர்கள் செல்கின்றனர். அம் முத்தாரம் திருவெண்காடர் கழுத்தில் விழுகிறது]

[இந்த சீனிலும் கள்வர் வேடதாரிகள் கதாசாரப்படி பேசிக் கொள்ளலம்]

[உடன் காவலர்கள் வெளிவந்து]

1-வது காவ. வ-ம்:—அடடே! சாவடி இதோ தெரிகிறது. இந்தத் தடத்தைப் பார்த்துப் போடா.

2-வது காவ. வ-ம்:—சர்தாண்டா! எல்லாம் எனக்குத் தெரியும். நீ என் பின்னாலே வாடா.

3-வது காவ. வ-ம்:—(உற்றுப் பார்த்து) அடடே பயல்களா! அதோ பாருங்கடா புள்ளயார் கோயிலிலே மினுக்கு மினுக்குண்ணுது.

[எல்லோரும் சென்று திருவெண்காடர் கழுத்திலிருக்குஞ் சரப்பளியைக் கண்டவரைக் கள்வரெனத் தீர்மானித்துப் பிடித்துப் போகின்றனர்]

(சீன் முடிவு.)

---

## சீன்—22. இடம்—உஞ்சேனே மாகாளம் தர்பார்.

நடிகர்:—திருவெண்காடர், பத்திரகிரியரசர், மந்திரியார், காவலர்.

1-வது காவ. வ-ம்:—மகாராஜா! இந்தத் திருடன் நம்பவூட்டு[illegible] பள்ளியை கயித்திலே போட்டுக்னு புள்ளையா[illegible] இருந்தான். எம்மவனே அபேஸ்பண்ணி[illegible] டோம்.

மந். வ-ம்:—[illegible]! இவன் கள்வனென்பதில் தடையில்லை. உடனே நமது ராஜீய நீதிப்படி இவனுக்கேற்ற தண்டனை இடுங்கள்.

பத். வ-ம்:—நல்லது; இக்கள்வன்செய்த குற்றத்திற்காக இவனுடன் சேர்ந்த மற்ற கள்வருக்கும் புத்திவரும்படி இவனைக் கழுமாத்தி லேற்றுங்கள்.

[செல்கின்றனர்]

5

(சீன் முடிவு.)

---

சீன்—23. இடம்—உஞ்சேனைமாகாளம் கழுமரம்.

நடிகர்:—திருவெண்காடர், காவலர், பத்திர கிரியார், மந்திரி பிரதானி முதலியோர்.

[காவலர் திருவெண்காடரைக் கழு மாத்தி லேற்றுகின்றனர்]

## திருவெண்காடர் விருத்தம்

என்செய லாவ தியாதொன்று மில்லை இனித் தெய்வமே
வுன்செய லேஎன் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோயிங்ங னேவந்து மூண்டதுவே.

[கழுமரம் தீப்பற்றி எரிவதைக் கண்ட பத்திரகிரியார் தனது ராஜகோலந் துறந்து துறவுபெற்று திருவெண் காடரின் திருவடியில் விழுந்து]

பத். வ-ம்:—சுவாமி நமஸ்காரம். சிறியேன் தங்களது மகிமை தெரியாது செய்த பிழை பொறுக்கவேண்டும்.

திரு. வ-ம்:—ஆசீர்வாதம். அப்பா எழுந்திரு. வீணிலேன் வருந்துகின்றாய். நான் தெரிவிப்பதைக் கேள்.

## பாட்டு

(தசரதராஜகுமாரா என்ற மெட்டு)

பல்லவி

மாயமிம் மானிட வாழ்க்கை
வுயிர் சேர்க்கை
[illegible] கொண்ட யாக்கை
[illegible]ச் சாக்கை (மாயை)